உ

சிவமயம்.

சமயாசாரியர் சந்தாசாரியர் சரித்திர சங்கிரகம்.

திருமயிலை

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை எழுதியது.

2737

கொழும்பு விவேகானந்த சபையாரால்
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில்
அச்சிடுவிக்கப்பெற்றது.

சர்வதாரி வரு.

பதிப்புரை.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம் [வாய்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத்த ரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சைவசமயாசாரியராகிய நால்வருடைய சரித்திரங்களை 1923-ம் ஆண்டில் எழுதித் தனித் துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்டேன். பின்னர் 1926-ம் ஆண்டில் அவற்றை ஒன்றாகச் சேர்த்துச் சிறு புத்தக அளவில் அச்சிட்டு இலவசப் பிரசுரமாக வழங்கினேன். அச்சுச் செலவைக் குவாலாலம்பூரினும் கொழும்பினு மிருந்த சிவநேயச்செல்வர்க ளிருவர் ஏற்றுக்கொண்டனர்.

சரித்திரங்கள் மிகச் சுருக்கமாக இருப்பதாகச் சில நண்பர்கள் குறைகூறினர். அக்குறையை நீக்கும் பொருட்டு இப்போது சற்று விரிவாக எழுதலானேன். சிவநேயச் செல்வர்கள் அங்கீகரிப்பார்களாக.

சைவ பரிபாலனத்திற் பேரூக்கமுள்ள கொழும்பு விவேகானந்த சபையார் இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்தனர். அவர்கள் சைவாபிமானம் போற்றத்தக்கது.

இந்நன்முயற்சியில் முதலில் என்னைத் தூண்டியவர் நண்பர் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை யவர்களாவர். அப்பெரியாருக்கு எனது வந்தனம் உரியதாகுக.

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை.

[illegible]

க. சம்பந்தர்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

தென்னாட்டிலே சீகாழி யென்பது ஓர் பழம்பதி. அதற்குப் பிரமபுரம், தோணிபுரம், புகலி முதலிய பன்னிரு திருப்பெயர்கள் உண்டு. அத்திருப்பதியில் பல நூற்றாண்டுகளுக்கு முன் சிவபாதவிருதயர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் தமது பெயருக்கு ஏற்றபடி பெரிய சிவபக்தர். அவர்காலத்தில் பௌத்தம் சமணம் முதலிய புறச்சமயங்கள் தமிழ்நாட்டில் மிகுதியாகப் பரவியிருந்தன. அதனால் சைவசமயம் குன்றியிருந்தது. இந்நிலையை யறிந்த சிவபாதஇருதயர் மிகவும் வருத்தப்பட்டார்; புறச்சமயங்களை ஒழித்துச் சைவசமயத்தை வளர்க்கத்தக்க ஓர் புதல்வரைப் பெறுதற்கு விரும்பிச் சிவபிரானை வழிபட்டுவந்தார். அவ்வழிபாட்டின் பயனாக இவரது மனைவியாராகிய பகவதியம்மையாரிடத்தே ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இளமையிலேயே அக்குழந்தையினிடத்தே தெய்வத்தன்மை விளங்கியது. அதன் மூன்றாம் வயதிலே ஒருநாள் அவர் தந்தையார் நீராடச் சென்றார். குழந்தையும் அவரைப் பின்தொடர்ந்து சென்றது. தந்தையார் குழந்தையைக் கரையில் விட்டுக் குளத்தில் மூழ்கினர். குழந்தை அவரைக் காணமையால் திகைத்துக் கோயிற் கோபுரத்தை நோக்கி அம்மே அப்பா என்று விம்மி அழுதது. தோணியப்பர் உமாதேவியாரோடு எழுந்தருளிக் குழந்தைக்குக் காட்சிதந்து சிவஞானமாகிய பாலைப் பருகுவித்து அழுகையைத் தீர்த்தருளினர். தந்தையார் நீராடலை முடித்துக்கொண்டு குழந்தையிடம் வந்தார். குழந்தைக்கு ஞானோதயம் உண்டாயிருப்பதை அறிந்தார்; அதை உண்டுபண்ணியவரைக் காட்டும்படி கேட்டார். குழந்தை தமது மனக்கண்ணிற்குத் தோன்றிய சிவபிரானைச் சுட்டிக் காட்டியதோடு அவ்விறைவனது இலட்சணத்தையும் "தோடுடைய செவியன்" என்

னுந் திருப்பதிகத்தால் அறிவித்தது. அழுதபோது "அம்மே அப்பா" என்று அழைத்ததுபோல, இப்பதிகத்தின் முதலிலும் சத்தியை முதலில் வைத்திருக்கின்றார். இதனால் சத்தியாகிய திருவருள் மூலமாகத்தான் உயிர்கள் சிவத்தை யடையலாம் என்னும் உண்மை பெறப்படும்.

இக் குழந்தை இறைவனால் வலிய ஆட்கொள்ளப்பட்டமையால் ஆளுடையபிள்ளையாரென்றும், சிவஞானம் ஊட்டப்பட்டமையால் திருஞானசம்பந்தமூர்த்தி என்றும் அழைக்கப்படும். பிள்ளையாரின் சிறப்பைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசர் திருநீலகண்டப்பெரும்பாணர் முதலிய பல சிவனடியார்கள் சீர்காழிக்கு எழுந்தருளினார்கள். பெரும்பாணர் பிள்ளையார் பாடும் திருப்பதிகங்களையெல்லாம் வீணையில் வாசித்துக்கொண்டு பிள்ளையாரோடு இணைபிரியாமல் இருந்துவந்தார்.

பிறகு பிள்ளையார் தலயாத்திரையாகச் சிதம்பரம் முதலிய தலங்களுக்குப் போனார். தந்தையார் இவரைத் தோளின்மேலே தூக்கிச் சென்றார். இவர் சிதம்பரத்தைத் தரிசித்தபோது அப்பதியிலுள்ள தில்லைவாழந்தணர்களைச் சிறப்பித்து ஒரு திருப்பதிகம் பாடினர். திருக்கோலக்காவில் இவருக்குப் பொற்றாளம் அளிக்கப்பட்டது. பின்பு திருநெல்வாயிலரத்துறையை அடைந்தார். அங்கே அவருக்கு முத்துப்பல்லக்கும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் சிவபிரானால் அருளப்பட்டன.

திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் தலத்தை யடைந்தபோது, அங்குள்ள கொல்லிமழவன் என்னுஞ் சிவநேசனது மகள் முயலகன் என்னும் கொடியநோயினால் வருந்துவதை அறிந்து, அவள் நோயை நீக்கும்படி ஒரு திருப்பதிகம் பாடினார். அவள் உடனே நோய் நீங்கப்பெற்றுப் பிள்ளையாரை வணங்கினாள். அப்பால், கொங்கதேசத்திற்குச் சென்றார். திருச்செங்கோட்டிற்குச் சென்றபோது, அவருடைய திருக்கூட்டத்தினர் பனி மிகுதியால் சுரத்தால் வருந்தினர். பிள்ளையார் உடனே திருநீலகண்டப்பதிகம் பாடினார். பனிப்பிணி அந்நாடு முழுதும் விட்டொழிந்தது.

திருப்பாய்த்துறை, வலஞ்சுழி, பழையாறை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு அவர் பட்டீச்சரம் சென்றார். அங்கே அவருக்கு முத்துப்பந்தர் அளிக்கப்பட்டது. பிறகு திருவாவடுதுறைக்கு வந்தார். அப்போது தந்தையார் யாகஞ் செய்வதற்குப் பொருள் வேண்டுமென்று பிள்ளையாருக்கு விண்ணப்பித்தார். ஒரு திருப்பதிகம் பாடிய அளவில் பொன் உலவாக்கிழிபோன்று ஆவடுதுறையானால் அருளப்பட்டது. அதைத் தந்தையாரிடம் கொடுத்தார்.

தருமபுரம் திருநள்ளாறு முதலிய தலங்களுக்கும் போய் சாத்தமங்கையை அடைந்தார். அங்கே திருநீலநக்கரைக் கண்டு அவருடன் சிலநாள் தங்கினார். பின்னர் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரைக் கண்டார். இவ்விரு தொண்டர்களையும் தமது திருப்பதிகங்களிலே சிறப்பித்துப் பாடினார். சிலநாளாயபின்பு திருமருகலுக்குப் போய்த் தரிசனஞ் செய்துகொண்டிருந்தார். அங்கே ஒருவன் பாம்பு கடித்து இறந்தான். அவனுடன் வந்த அவனது மாமன் மகளாகிய கன்னிகையின் துக்கத்தை நீக்கத் திருவுளங்கொண்டு அவர் ஒரு திருப்பதிகம் பாடினார். உடனே அவ்வணிகன் உயிர்த்தெழுந்து பிள்ளையாரை வணங்கினான்.

பின்பு திருப்புகலூருக்குச் சென்று அங்கேயிருந்த முருகநாயனாருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகமொன்று பாடினார். பின்னர் அப்பர்சுவாமியைச் சந்தித்து அவருடன் திருவீழிமிழலையை அடைந்தார். அப்போது பஞ்சத்தாற் பலர் பசிநோயினால் வருந்தினர். பிள்ளையாருக்கும் அப்பர்சுவாமிக்கும் தனித்தனி ஒவ்வொரு பொற்காசு தினந்தோறும் சிவபிரானால் அக்கோயிலில் வைத்தருளப்பட்டது. அக்காசைக்கொண்டு இருவரும் தமது திருக்கூட்டத்தாருக்குக் குறைவின்றி அமுதுபடைத்து வந்தனர்.

சிலநாட்களுக்குப்பின் இருவரும் பல தலங்களை வணங்கிக்கொண்டு வேதாரணியத்துக்குச் சென்றனர். அங்கே வேதங்களாற் பூசிக்கப்பட்டுத் திருக்காப்பிடப்பட்ட கோயிற் திருவாயிலைத் திறக்க அப்பமூர்த்திகளும் அடைக்கப் பிள்ளையாரும் திருப்பதிகங்களைப்

பாடியருளினுர்கள். இப்படி இருவரும் வேதாரணியத்திலே இருந்தபோது, மதுரையிலிருந்து பாண்டியனுடைய மனைவியாரும் (மங்கையர்க்கரசியார்) முதல் மந்திரியாரும் (குலச்சிறையார்) அனுப்பிய சில தூதுவர்கள் வந்து, பாண்டிநாட்டிலே சைவசமயம் குன்றியதாகவும் சமணசமயம் பரவியிருப்பதாகவும் அதனுல் சுவாமிகள் மதுரைக்கு எழுந்தருளிச் சைவத்தை நிலைநாட்டவேண்டியது அவசியமென்றும் முறையிட்டனர். பிள்ளையார் அப்பர்சுவாமிகளை வேதாரணியத்திலேயே இருக்கச்செய்து தாம் மதுரைக்குப் பிரயாணமானுர். பிள்ளையாரது வருகையைக் கேள்வியுற்ற பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் அவரை எதிர்கொண் டழைத்தனர். அவ்விருவரது அருமைத் திருத்தொண்டுகளை அவர் ஒரு திருப்பதிகத்திற் சிறப்பித்தார். பின்பு மதுரைச் சொக்கலிங்கப் பெருமானைத் தரிசித்து ஒரு திருமடத்தில் தமது திருக்கூட்டத்தவரோடு எழுந்தருளி யிருந்தார்.

பிள்ளையாரையும் அவரைச் சேர்ந்த சிவனடியார் கூட்டத்தையுங் கண்ட சமணர்கள் பொருமைகொண்டு பாண்டியராசனிடம் போய் முறையிட்டனர். அச்சிவனடியார்களை மதுரையிலிருந்து துரத்திவிட உபாயம் யாதென்று பாண்டியன் அவர்களையே கேட்டான். அவர்கள் நாயனுர் தங்கியுள்ள மடத்தில் தீவைப்பதே தகுதியென்று விடை கூறினர். அரசன் அவ்வுபாயத்திற்குச் சம்மதிக்கவும், பிள்ளையாரது மடத்திலே நெருப்பு வைக்கப்பட்டது. மடத்திலிருந்த திருக்கூட்டத்தினர் விரைந்து நெருப்பை அணைத்தார்கள்; பின்னர் இச்செய்தியைப் பிள்ளையாருக்குத் தெரிவித்தனர். சமணர்களின் செயல் மிகவும் தீயதானதால் பிள்ளையார் அரசனைத் தண்டித்து அவனது தீய வினையைத் தொலைப்பதற்காக "செய்யனே திருவாலவாய்" என்னுந் தொடக்கமுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினர். உடனே பாண்டியனுக்கு வெப்புநோய் உண்டாயிற்று. சமணகுருமார்கள் பல சிகிச்சைகள் செய்தும் அந்நோய் நீங்கவில்லை. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சம்பந்தசுவாமிகளை வரவழைத்தால் நோய் தீருமென்று பாண்டியனிடஞ் சொன்னுர்கள். வரவழைத்தற்குப் பாண்டியன் சம்மதித்தான். அவ்வாறே பிள்ளையாரை அழைக்கவும், அவர் சிவசந்நிதானத்திற்

குச் சென்று வணங்கியபின் பாண்டியனுடைய மாளிகைக்கு வந்தார். சுவாமிகளது வருகையை அறிந்த சமணர்கள் மனம் புழுங்கி அவரைச் சமயவாதத்திற்கு அழைத்தனர். பாண்டியன் பிள்ளையாரையும் சமணர்களையும் நோக்கித் தனக்கு வந்துள்ள நோயை எவர் விரைவாகத்தீர்க்கின றனரோ அவரே வென்றவராவர் என்றுன். சமணர்கள் அரசனது இடப்பாகத்து நோயைத் தாங்கள் தீர்ப்பதாகவும், மற்றைப் பாகத்து நோயைப் பிள்ளையார் தீர்க்கவேண்டுமென்றும் உறுதிகொண்டார்கள். அப்படியே அவர்கள் பாண்டியனுடைய இடப்பாகத்தை மயிற்பீலியினுலே தடவி மந்திரங்களை உச்சரித்தனர். வெப்புநோய் அதிகரித்ததேயன்றிச் சிறிதுங் குறையவில்லை. பிள்ளையார் திருநீற்றுப்பதிகம் பாடி வலப்பாகத்திலே திருநீற்றைப் பூசியஅளவில் அப்பாகத்து நோய் தீர்ந்தது. இடப்பாகத்து நோயைச் சமணர்கள் நீக்க முடியாமையால் பிள்ளையாரே அதனையுந் தீர்க்க நேர்ந்தது. பாண்டியன் உடனே சைவசமயத்தை மேற்கொண்டான்.

அப்பால், சமணர்கள் தங்கள் சமயமகிமையை நேரே காட்டுதற்கு விரும்பினுர்கள். அதற்காக இருபக்கத்தாரும் தத்தம் சமயக்கருத்தை ஏட்டிலே எழுதி நெருப்பிலிடத் தீர்மானித்தனர். சமணர்கள் தம் மந்திரத்தை எழுதி யிட்ட ஏடு வெந்து சாம்பராயிற்று. சுவாமிகள் ''போகமார்த்த பூண்முலையாள்'' என்னுந் திருப்பாசுரத்தை எழுதியிட்ட ஏடோ பச்சையாய் இருந்தது. இரண்டாவது முறையாகத் தங்கள் ஏட்டை வைகை ஆற்றிலே இடத் தீர்மானித்து எதிர்நோக்கிச் செல்லும் ஏடே மெய்ப்பொருளுடையது என்று ஓட்டினுர்கள். ஆனுல், சமணர்களிட்ட ஏடு கடலை நோக்கிச் சென்றது. பிள்ளையாரிட்ட ஏடோ நீரைக் கிழித்துக்கொண்டு எதிரே போனது. இதனுல் சமணசமயம் பொய்ந்நெறி என்று நாட்டப்பட்டது. அரசன் சைவனுக மாறினமையால் சமணசமயம் பாழ்பட, சைவம் தழைக்கலாயிற்று. சைவசமயத்தைச்சார விருப்பமில்லாத சமணர்கள் தாங்களே கழுமரங்களில் ஏறித் தங்கள் உயிரை மாய்த்தனர்.

பிறகு பிள்ளையார் பாண்டிநாட்டிலுள்ள ஏனைய தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டுஞ் சோழநாட்டை அடைந்தார். அவர்

முள்ளியாற்றங்கரையைக் கிட்டியபோது ஆற்றில் வெள்ளம் புரண்டு ஓடுவதைக் கண்டார். வெள்ளப் பெருக்கினால் ஆற்றை ஓடத்தாற் கடக்க முடியாதாயிற்று. எதிர்க்கரையிலுள்ள கொள்ளம்பூதூரைப் பிள்ளையார் வணங்க விரும்பினமையால், ஓடத்தின்மீது தம் மடியவருடன் ஏறி "கொட்டமே கமழும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். திருவருளால் ஓடம் அக்கரையை அடைந்தது.

அதன்பின்னர், தெளிச்சேரியை நோக்கிச் சென்றார். போதிமங்கையிலுள்ள பௌத்தர்கள், சிவனடியார்களைக் காணப் பொறாமை கொண்டு, அவர்களை வாதுக்கழைத்தனர். அப்போது சுவாமிகளது எழுத்தாளர் பஞ்சாக்கரப்பதிகத்திலுள்ள "புத்தர் சமண் கழுக்கையர்" என்னுந் திருப்பாடலைச் சொல்லி பௌத்தர்களின் தலைவனை புத்தநந்தியைத் தண்டித்தனர். இதைக் கண்டு மருண்டோடிய பௌத்தர்கள், மீண்டும் வந்து மந்திரவாதமின்றித் தருக்கவாதத்திற் கழைக்கவும், பிள்ளையார் இசைந்தருளினர். சம்பந்தர் புத்தனோடு வாதஞ்செய்து அவனை வென்று சைவத்தை நாட்டினார். புத்தர்கள் தங்கள் சமயம் பொய்ச்சமயம் என்றறிந்து சைவரானார்கள். பிள்ளையார் பின்பு திருநெய்த்தானம் முதலிய தலங்களுக்குப் போய்க் கடைசியாகச் சீகாழிக்கு வந்து அங்கே சிலநாள் தங்கியிருந்தார்.

பின்பு அவர் தொண்டைநாட்டிலே யாத்திரைசெய்ய விரும்பிப் புறப்பட்டார். பல தலங்களை வணங்கிக்கொண்டு திருவோத்தூரை அடைந்தார். அங்கிருந்த சிவனடியார் ஒருவர் தாம் பரமசிவனுக்கு ஆக்கும் பனைகளெல்லாம் ஆண்பனைகளாகிக் காயாதொழிகின்றன என்றும், அதனால் தம்மைச் சமணர்கள் கேலிசெய்கிறார்களென்றும் சொல்லி முறையிட்டார். நாயனார் திருக்கோயிலுக்கு எழுந்தருளிப் பாடிய ஒரு திருப்பதிகத்தில் இப்பனைகளைக்குறிப்பித்தருளினார். அவ்வளவில் அவைகளெல்லாம் பெண்பனைகளாக மாறிப் பூத்துக் காய்க்கத்தொடங்கின. இவ்வற்புதத்தைக் கண்ட சமணர்கள் திகைத்தனர். பலர் சைவராயினர். சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி திருவாலங்காடு, திருக்காளத்தி முதலிய தலங்களுக்குச் சென்று வணங்கிக் கடைசியாகத் திருவொற்றியூரை வந்தடைந்தார்.

அக்காலத்திலே, திருமயிலாப்பூரிலே சிவநேசச் செட்டியாரென்னும் வணிகப்பிரபு ஒருவர் இருந்தார் அவர் பெருஞ் சிவனடியவர். அவருக்குப் பூம்பாவை என்றொரு மகள் இருந்தாள். அவர் சம்பந்தரது மகிமையைக் கேள்வியுற்று அவர்மீது அளவில்லாத அன்புடையராய் விளங்கினமையால் தம் மகளை அவருக்கே மணஞ் செய்விக்க நிச்சயித்திருந்தார். ஒருநாள் அப்பெண் திடீரெனப் பாம்புகடித் திறந்தாள். அப்பெண்ணின் சவத்தைத் தகனஞ்செய்து எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் சேமித்து வைத்திருந்தார். பிள்ளையார் திருவொற்றியூருக்கு வந்திருப்பதைச் செட்டியார் அறிந்து அவரிடஞ் சென்று நிகழ்ந்ததை யறிவித்துத் திருமயிலைக்கு அவரைத் தம்மோடு அழைத்துச் சென்றார். பிள்ளையார் சிவநேசரது கருத்தை முடிக்கவும், சமணம் பௌத்தம் முதலிய புறச்சமயங்களை அழிக்கவுந் திருவுளங்கொண்டு பூம்பாவையின் எலும்புஞ் சாம்பரும் நிறைந்த குடத்தைத் திருக்கோயிலினருகே கொண்டுவரச் செய்து "மட்டிட்ட புன்னை" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே பூம்பாவை குடத்திலிருந்து வெளியே தோன்றினார். இவ்விநோதத்தைக் கண்ட புறச்சமயிகள் அதிசயப்பட்டார்கள்.

பிறகு சிவநேசரிடம் விடை பெற்றுக்கொண்டு திருமயிலாப்பூரை அகன்று திருவான்மியூர், திருக்கழுக்குன்றம் முதலிய பதிகளை வணங்கிக்கொண்டு சிதம்பரத்தை யடைந்து அங்குச் சிலநாள் தங்கியிருந்தார். தந்தையார் முதலிய சுற்றத்தவர் சீர்காழியிலிருந்து அங்கே வருதலும் அவர்களுடன் சீர்காழிக்குச் சென்றார்.

சீர்காழியில் வசிக்கும் நாளிலே, தந்தையாரும் பிறரும் சுவாமிகளைத் திருமணஞ்செய்தருள வேண்டினர். வைதிகநெறியை நிலைநிறுத்தவேண்டிச் சுவாமிகள் உடன்பட்டு திருநல்லூர் நம்பியாண்டார்நம்பி என்பவருடைய மகளை வேதவிதிப்படி விவாகஞ் செய்தருளித் தமது திருமணத்தைக் காண வந்தவர்கள் எல்லோருஞ் சூழத் திருமணக்கோலத்தோடு திருநல்லூர்ப் பெருமணத் திருக்கோயிலை யடைந்து "நல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகம் பாடியருளினர். அப்போது ஒரு பெருஞ் சோதி தோன்றிற்று. அவர் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடி அதைப் பூசித்தபின்பு, எல்

லோரையும் அச்சோதியுட் புகுத்தித் தாம் கடைசியாகத் தம்முடைய மனைவியாருடன் அச்சோதியை வலஞ்செய்து பணிந்து அதனுள்ளே புகுந்து முத்தியடைந்தார். அப்படி அவர் முத்தியடைந்த தினம் வைகாசி மூலமாகும். அப்போது அவருக்கு வயது பதினாறு.

ஞானசம்பந்தர் மூன்றும் வயதிலேயே தெய்வீகத்தோடு விளங்கினமையால் அவர் சாமுசித்தரெனப்படுவர். சாமுசித்தரா வார் முற்பிறவிகளிலே சரியை, கிரியை, யோகம் முதலிய மார்க்கங் களிற் றலைசிறந்து இப் பிறப்பில் ஞானத்தோடு விளங்குபவர். இவர் அதீத ஞானத்தைப் பெற்றிருந்தமையால் சுப்பிரமணியர் அவ்தாரமென்று சிலர் கூறுவர். அருணகிரியார், சிதம்பரசாமிகள் முதலியோர் சம்பந்தர்செய்த அற்புதங்களைச் சுப்பிரமணியர்மேல் ஏற்றிக் கூறுவர். சுப்பிரமணியப் பெருமானுக்கும் சிவபெரு மானுக்கும் பேதமின்மையால் சம்பந்தரைச் சுப்பிரமணியர் அவதார மென்று கூறுதல் சைவ சித்தாந்த சாத்திரத்திற்கு விரோதமாகும். சுப்பிரமணியப் பெருமானுடைய பதவியைப்பெற்ற ஓர் பக்குவ ஆன்மா சம்பந்தராகப் பிறந்ததென்று கொள்ளுதலே ஏற்புடைய தாகும். சம்பந்தருக்கும் இறைவனுக்கும் இருந்த தொடர்பு மக னுக்கும் தந்தைக்கு முள்ளதை ஒக்கும். பிள்ளையாருக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் தந்தையாகிய சிவபெருமானே அமைத்துக் கொடுத்தமை இத் தொடர்பை உறுதிப் படுத்தும்.

சுவாமிகள் தமது மூன்றும் வயதுமுதல் பதினாறும்வயதுவரை யில் அதாவது பதின்மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டிலுள்ள பலஇடங் களுக்குச் சென்று தமது தேவாரப் பாடல்கள் மூலமாகவும் பல அற்புதங்கள் வாயிலாகவும் சைவத்தைப் பரவச்செய்து, புறச் சமயங் களை மங்கச் செய்தார். சுவாமிகள் அற்புதங்களை அதிகமாகக் கையாண்டது என்னெனின், சமயக் கொள்கைகளைத் தருக்க முறையாக வாதிப்பதிலும் பார்க்கச் சாமானிய சனங்களுக்கு உணர்ச்சியை உண்டுபண்ணக் கூடியவை இவ் வற்புதங்களே யாத லின் என்க. இவர் அருளிய பாடல்களுக்குத் தேவாரம் என்றுபெயர். இவை முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட் டுள்ளன. இவர் அருளிச்செய்த திருப்பதிகத் தொகை ௧௬000 அவற்றுள் இப்போ

துள்ளவை ௩௮௪. இவரது பாடல்பெற்ற தலங்கள் ௨௧௬. சுவாமி கள் பல சமயங்களை நிராகரித்துச் சைவத்தை நிலைநாட்ட வந்தவ ராதலின் தாம் அருளிச்செய்த ஒவ்வொரு பதிகத்திலும் சைவத் தின் ஏற்றத்தையும் பௌத்தம் சமணம் முதலியவற்றின் தாழ்வை யும் எடுத்துக் கூறுவர். இவரது தேவாரங்கள் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ் இலக்கணங்களும் விரவியுள்ளன. இத னால் இவரை முத்தமிழ் விரகரென்பர். இவரைப் பரசமயகோளரி, சைவசிகாமணி, பாலறுவாயர், சண்பையர்காவலன் கவுணியர் தலைவன், சிவஞானக்கன்று, காழிவேந்தர் முதலிய பல பெயர்க ளால் ஆன்றோர் அழைப்பர்.

தமிழ்நாட்டிலே சைவ சமயமானது புறச்சமய இருளாற் சூழப்பட்டுச் சற்றுத் தன்னொளி குன்றியிருந்த காலத்திலே, சம்பந் தர் தோன்றித் திருநீற்றின் ஒளியை எங்கும் பரப்பியமையாலும் புறச்சமய இருளைப் போக்கினமையாலும் இவர் புரிந்த சிவதொண்டு ஏனையோர் செய்ததிலும் மேலாகப் போற்றப்படு கின்றது. இதனாற்போலும் நம்பியாண்டார் நம்பிகள் சுவாமிகள் மீது ஆறு பிரபந்தங்கள் பாடியது. நம்பிகளுக்குப் பின்வந்த சேக் கிழாரும் தாம் பாடிய பெரிய புராணத்தில் மூன்றிலொருபகுதி சம்பந்தருக்குக் கொடுத்துள்ளார். சுவாமிகள் காலத்தில் விளங்கிய மெய்யடியார்கள் திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், குங்கிலியக் கலயர், குலச் சிறையர், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார் முதலியோர்.

சுவாமிகளால் தேவாரத்தில் பாராட்டப்பட்டவர்கள்:—சண்டே சுரர், கண்ணப்பர், கோச்செங்கட் சோழர், நீலநக்கர், முருகர், சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், தில்லைவா ழந்தணர்கள் முதலியோர்.

சுவாமிகளுடன்' முத்தியடைந்தவர்கள்:— திருநீல நக்கர், முருகர், சிவபாத விருதயர், நம்பியாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்களும் அவர்கள் மனைவி மக்களும்.

நாயனாரின் சரித்திரத்தைக் கூறும் நூல்கள்

௧. பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள் (௬)
௨. பெரிய புராணம்.
௩. சீகாழித்தல புராணம்.
௪. ஆச்சாபுரத்தலபுராணம் முதலியன

துதி

பண்டைவல் வினையினாற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.

———

௨. அப்பர்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன்.

தென்பெண்ணை யாற்றைச் சூழ்ந்த திருமுனைப்பாடி நாடென்பது இப்போதுள்ள கூடலூர்ச் சில்லாவாகும். அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே அந்நாட்டிலேயுள்ள திருவாமூரிலே புகழனார் என்னும் வேளாளர் தமது மனைவியாராகிய மாதினியா ரென்பவரோடு வாழ்ந்து வந்தார். அவருக்குத் திலகவதியா ரென்னும் பெண்ணும் மருணீக்கியார் என்னும் பிள்ளையும் பிறந்தன. திலகவதியாரும் மருணீக்கியாரும் சிறுவயதிலே தங்கள் தாய் தந்தையரை இழந்தனர். ஆயினும் இளமையிலேயே மருணீக்கியார் சகல நூல்களையும் படித்து வல்லவராயினார். அவருக்கு யாதொரு குறைவும் நேரிடாதபடி தமக்கையாராகிய திலகவதியார் துணைபுரிந்து வந்தார்.

மருணீக்கியார் சரீரமும் செல்வமும் நிலையில்லாதவை என்று நினைத்துப் பல தருமங்களைச் செய்துவந்தார். இவ்வுலகவாழ்வு மண்

ணுவது திண்ணமாதலால் மாயமானது என்று கண்டு இல்லற வாழ்க்கையை வெறுத்தார். ஆயினும் பாடலிபுத்திரம் என்னும் இடத்திற்குச் சென்று சமணர்களோடு சேர்ந்து அவர்களுடைய போதனையினாலே மயங்கிச் சமணசமயமே மோட்சத்தைத் தரத்தக்கதென்று எண்ணி அதிற் புகுந்தார். அச்சமய நூல்களை யெல்லாங் கற்றுத் தேர்ச்சிபெற்றார். புத்தர்களுடன் வாதஞ்செய்யக்கூடிய வல்லமை படைத்தவராகிச் சமணசமயக் குருவாக விளங்கினார்.

இவர் இவ்வாறிருக்க, தமக்கையாராகிய திலகவதியாரோ திருவதிகைவீரட்டானக் கோயிலிலே திருத்தொண்டுசெய்துவந்தார்; தமது தம்பியாருடைய நிலைமையை ஒரு நாள் நினைத்து வருந்தினார். அவரை மீட்டும் சைவசமயத்துக்குத் திருப்பும் ஆசையோடு சிவபிரானைத் துதித்தார். அப் பிரானது திருவருளால் மருணீக்கியாரது வயிற்றிலே கொடிய சூலைநோய் உண்டாயிற்று. அந்நோய் அவரை மிகவும் வருத்தியது. எவ்வித சிகிச்சையாலும் நோய் நீங்கவில்லை. சமணர்களெல்லோரும் அவரைக் கைவிட்டனர். அத்தருணத்தில் அவர் தம்முடைய சகோதரியாருக்குத் தமது தேக நிலைமையைத் தெரிவித்தார். திலகவதியார் சமணர்களுடைய பள்ளிக்குத் தாம் வர முடியாதென்று மறுத்துவிட்டார். அதனால் மருணீக்கியார் தாமே தமது சகோதரியாரிடம் போக நினைத்தார். அவ்வாறே ஒருவருங் காணாதபடி ஓர் இரவில் தமது தமக்கையாரது திருமடத்தை யடைந்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தம்மைக் கரையேற்றியருளும்படி வேண்டினார்.

வேண்டவும், தமக்கையார் பிறவிப்பிணி முதலிய சகல நோயையும் நீக்க வல்ல வைத்தியநாதராகிய சிவபெருமானையே வணங்கும்படியும் அவருக்கே தொண்டு பூண்டொழுகும்படியும் உபதேசித்துத் திருநீற்றை எடுத்து அவருக்குப் பூசினார். மறு நாட் காலையில் அவரை யழைத்துக்கொண்டு திருவதிகைவீரட்டானத்திற்குப் போனபோது, மருணீக்கியாருக்குத் தமிழ்க் கவி பாடும் வல்லமை உண்டாகவும், அவர் வீரட்டானேசுவரர் மீது "கூற்றாயின" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே அவரைப் பிணித்து வருத்திய சூலைநோய் நீங்கிற்று. அவருடைய பாடல்கள் இனிமை மிகுந்து விளங்கியமையால், அவருக்கு "நாவுக்கரசு"

என்னும் காரணப்பெயர் இறைவனாற் சூட்டப்பட்டது. நாயனார் மனம் மொழி மெய்களாற் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்துவந்தார்.

சுவாமிகளுடைய செய்கையைக் கேள்வியுற்ற சமணர்கள் பொறாமை கொண்டு, அவரை அழைப்பித்துத் தண்டிக்கும்படி, அரசனுக்குக் கற்பித்தார்கள். அவன் அவ்வண்ணமே சுவாமிகளை வருவித்துச் சுண்ணாம்பு அறையில் இடுவித்தான். எழுநாட் சென்ற பிறகு அவ்வறையைத் திறந்து பார்த்தார்கள் நாயனார் சிறிதும் வருத்தமின்றி இருந்ததைக் கண்டு அதிசயித்தார்கள். அதன்பின், நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்தார்கள். நஞ்சும் அமுதமாயிற்று. இவற்றோடு அடங்காமல், அவரைக் கொல்லும்படி யானையை எவினார்கள். நாயனார் ஒரு திருப்பதிகம்பாடிய அளவில், அவரைக் கொல்லவந்த யானை அவரை வணங்கிச் சென்றது. கடைசியாக அவரைக் கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலிலே தள்ளினார்கள். நாயனார் சிவபெருமானது திருவைந்தெழுத்தை நினைத்துக் "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே" என்னும் திருப்பதிகத்தைப் பாடக் கல்லே தெப்பமாக மிதக்கக் கரையேறினார். இவற்றையெல்லாம் அறிந்த பல்லவராசன் நாயனாரை வந்து வணங்கிச் சைவனானான்.

பின்பு சிவதலயாத்திரை செய்து பெண்ணாகடத்தை அடைந்தார். அங்கே திருக்கோயில்கொண்டுள்ள சிவக்கொழுந்தீசர் சுவாமிகள்மீது சூலக் குறியையும் இடபக்குறியையும் அவர் வேண்டுகோளின்படி பொறித்தருளினர். பின்னர், சிதம்பரம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திருப்பதிகங்கள் பாடினார்.

பின்னர்ச் சம்பந்தமூர்த்தி நாயனாரது மகிமையைக் கேள்வியுற்று அவரைக் காணவிரும்பிச் சீகாழிக்குப் போனார். சுவாமிகளது வருகையை அறிந்த பிள்ளையார் அவரை எதிர்கொண்டழைத்தார். நாவுக்கரசர் பிள்ளையாரைக் கீழே விழுந்து பணிய, அவர் சுவாமிகளைத் தூக்கிவிட்டு "அப்பரே" என்று முறை பாராட்டி வணங்கினர். அது முதல் இருவரும் பல சிவதலங்களுக்கு ஒன்றாகப் போய்ப் பதிகம் பாடி வருவாராயினர். திருச்சத்திமுற்றத்தை

அடைந்தபோது நாவுக்கரசர் தம்மீது திருவடி சூட்டியருளும்படி சிவபிரானை வேண்ட, அவர் அவ்வாறே திருநல்லூரில் அருள் புரிந்தார்.

சிலநாட் கழிந்ததும், திங்களூரிலுள்ள அப்பூதியடிகள் பல தருமங்களைச் சுவாமிகள் பெயராற் செய்து வந்தமையைச் சுவாமிகள் கேள்வியுற்று அவரைக் காணச் சென்றார். அப்பூதியார் அப்பரைப் போசனத்திற்கு அழைத்துவிட்டு, தம் மூத்தமகனை வாழையிலை அரிந்துகொண்டு வரும்பொருட்டுத் தோட்டத்திற்கு அனுப்பினார். இலை யரியும்போது அம்மகன் பாம்பு கடிக்க இறந்தான். அவன் இறந்தமைக்குத் துக்கியாமல், அப்பருக்கு அமுது படைத்தலே பெருஞ் சிவபணியாகக் கொண்ட அடிகளும் அவர் மனைவியாரும் சுவாமிகளைத் திருவமுது செய்தருள அழைத்தனர். அங்கு நிகழ்ந்ததைத் திருவருளால் அறிந்த சுவாமிகள் ஒரு திருப்பாசுரம் பாடி இறந்த மகனை உடனே எழுப்பியருளினர். அப்பூதியாரின் திருத்தொண்டைச் சிறப்பித்துத் தமது திருப்பதிகத்திலும் பாடினார்.

சிலகாலத்திற்குப் பின் அப்பர் சம்பந்தருடன் வேதாரணியத்துக்குப் போனார். அங்குள்ள சிவாலயத்திற்குப் போனபோது, வேதங்களால் அருச்சித்துத் திருக்காப்பிடப்பட்ட கதவு அந்நாள் வரையும் அடைக்கப்பட்டேயிருந்தமையைக் கண்டார்கள். அதைத் திறப்பிக்க எண்ணி, அப்பர் திருப்பதிகம் பாடினார். பிள்ளையார் மீட்டும் அடைக்கப் பாடினார். அது முதல் அக்கதவைத் திறத்தலும் மூடுதலும் இலகுவாயின.

பின்னர், பிள்ளையார் மதுரைக்குப் போகவும். அப்பர் திருவானைக்கா முதலிய தலங்களை வணங்கித் திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் சென்றார். வழியிலே அவருக்குப் பசியும் தாகமும் வந்தன. இவற்றை நீக்கத் திருவுளங்கொண்ட சிவபெருமான் வழியிலே ஒரு சோலையையும் குளத்தையும் உண்டாக்கிப் பிராமண வேடம் பூண்டு வந்து இவருக்குச் சோறும் தண்ணீரும் கொடுத்துப் பசியைத் தீர்த்தருளினார். அதன்பிறகு, திருக்காளத்தி முதலிய தலங்களைத் தரிசித்தார். திருக்காளத்தியில் இருக்கும்போது உத்தர

கைலாசத்தைத் தரிசிக்க விரும்பினார். திருக்காளத்தியி லிருந்து புறப்பட்டுக் காசி முதலிய வடநாட்டுத் திருப்பதிகளை வழிபட்டு இமயமலைச் சாரலிலுள்ள திருக்கைலாச கிரியை நோக்கி இடைவிடாது நடந்துசென்றார். பருக்கைக் கற்கள் நிறைந்த மலைச்சாரல் வழியாக நடந்துசெல்லுவதால் தமது தேகத்துக்கு நேரிடும் துன்பங்களைப் பொருட்படுத்தாது கைலாசமலையை எப்படியேனும் தரிசித்துத் தீரவேண்டுமென்னும் உறுதியுடையவராயிருந்தார். மறுபடியும் சுவாமிகளைத் தமிழ்நாட்டிற் செலுத்தத் திருவுளங்கொண்ட சிவபெருமான் இவரைக் கூவி யழைத்துத் தாம் உத்தர கைலாசத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் திருவையாற்றிற் காட்டுவதாகவும், அருகிலுள்ள தடாகத்தில் மூழுகித் திருவையாற்றை அடையும்படியும் பணித்தருளினார். நாயனார் அங்ஙனமே அப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் அடைந்து அங்கே திருக்கைலாசக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

அப்பால், அவர் சம்பந்தரை மற்றுமோர்தரம் சந்தித்து அவருடன் சிலகாலம் அளவளாவி யிருந்தார். சம்பந்தர் தொண்டைநாட்டை நோக்கிச் செல்லவும், சுவாமிகள் பாண்டிநாட்டுக்குச் சென்றார்; பல சிவ தலங்களைத் தரிசித்துக்கொண்டு கடைசியாகத் திருப்புகலூரைச் சேர்ந்தார். அங்கே ஒவ்வொருநாளும் கைத்தொண்டு செய்துவருவாராயினார். அப்போது இவரது மனவுறுதியை யாவருக்கும் காட்டுதற்குத் திருவுளங்கொண்ட எம்பெருமான் இவருக்கு முன்னே பொன்னும் நவரத்தினங்களும் பிரகாசித்துக் கிடக்கும்படி அருள் செய்தார். நாயனார் அவைகளைச் சாமானிய பருக்கைக் கற்களாகவே மதித்தார்.

இவ்விதமாகச் சுவாமிகள் திருப்புகலூரில் தம் நிலையிற் சிறிதும் கலங்காது இருந்துவருங் காலத்தில் ஒருநாள் இறைவன் திருவடி நீழலைச் சேரவேண்டுமென்னுங் கருத்துத் தோன்ற ஓர் திருப்பதிகம் பாடியருளினர். அப்பர் எண்ணியவாறு பூம்புகலூர் மேவிய புண்ணியன் முத்திப்பேற்றை அருள்புரிந்தார் சித்திரைச் சதயமாகிய நன்னாளில். அப்போது சுவாமிகளுக்கு வயது ௮௧.

அப்பர் சரியாபாதத்தை விளக்க வந்த குருமூர்த்தி. சிவாலயங்கள்தோறுஞ் சென்று அங்கே காணப்படும் புல் பூண்டு முதலியவற்றை நீக்கும் திருத்தொண்டை மேற்கொண்டவர். புல் பூண்டைச் செதுக்கி எடுப்பதற்குரிய ஆயுதமொன்றை எப்போதுங் கையில் வைத்திருப்பதால், இவருக்கு உழவாரப் படையாளி என்ற பெயர் வழங்கலாயிற்று. சரியை கிரியை யோகமாகிய மூன்றினுள் எதுவும் ஞானிகள் செய்யத்தக்கதாதலால் அப்பர் சரியைச் சிவபுண்ணியத்துள் உழவாரத்தொண்டு செய்தருளினார்.

சுவாமிகளது திருப்பாடல்கள் தேவாரத்தைச் சேர்ந்தவை. இவரது பாடல்கள் நான்கு ஐந்து ஆறும் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவருடைய திருப்பாடல்கள் இனிமைவாய்ந்தவை; ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் அன்பை விளைத்துக் கருங்கல் மனமும் கரைந்துருகச்செய்யும் தன்மை யுடையவை. இவர் அருளிச் செய்த திருப்பதிகத்தொகை ௪௯000. அவற்றுள் இப்போதுள்ளவை ௩௧௧. இவருடைய பாடல்பெற்ற தலங்கள் ௧௨௫.

இவர் சைவசமயியாகப் பிறந்தும் ஊழின் வலியாற் புறச்சமயமாகிய சமணத்திற் புகுந்தார்; பிறகு தமக்கையாரின் குருபதேசத்தால் சைவசமயத்தின் உண்மையை உணர்ந்து அதன்வழி ஒழுகலானார். சுவாமிகள் மேலான நிலையில் நின்றமையால், இவருக்குச் சமணர்களால் செய்யப்பட்ட துன்பங்களெல்லாம் இன்பங்களாக மாறின. அத்துன்பங்களை இறைவனே ஏற்றுக்கொண்டான்.

சுவாமிகளுக்குச் சிவசின்னம் முதலிய சாதனங்களிலும் சிவாலய தொண்டிலும் பேரபிமானம் உண்டென்பதை இவருடைய பாடல்களால் அறியலாம். சிவபிரானுடைய நாமங்களை எப்போதும் உச்சரித்துக் கதற வேண்டுமென்று சுவாமிகள் நமக்கெல்லாம் போதிக்கின்றார். வெண்ணீறணியும்போது பஞ்சாக்கரத்தை உச்சரிக்கவேண்டு மென்று பல பாடல்களிற் கூறுகின்றார். தாம் ஊழின் வலியாற் சமண சமயத்திற் புகுந்துழன்றமைக்கு 'பெரிதும் வருந்திப் பாடுகின்றார். சிவனடியார் மலையேவந்து வீழினும் நிலை கலங்காரென்பதை ஓர் பாடலில் விளக்குகின்றார். பழமொழிகள் வாயிலாகப் பல உண்மைப் பொருட்களை நமக்குப் புகட்டுகின்றார்.

இவையெல்லாம் படித்து இன்புறத்தக்கன. நமது சுவாமிகளை ஆளுடைய அரசு, வாகீசர், தாண்டக வேந்தர் என்றும் அழைப்பர். இவர்காலத்தில் விளங்கிய மெய்யடியார்கள்:—சம்பந்தர், அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், நீலநக்கர், முருகர், திருநீலகண்டயாழ்ப்பாணர், குங்குலியக்கலயர், குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார் முதலியோர்.

இவரால் பாடப்பட்ட அடியார்கள்:— சம்பந்தர், அப்பூதியடிகள், கோச்செங்கட் சோழர், சாக்கியர் முதலியோர்.

அப்பூதியடிகள் இந் நாயனாரது திருப்பெயரையே மந்திரமாகக் கொண்டு ஓதி முத்தி யடைந்தா ரென்றால் இவர் பெருமையை என்னென்று கூறுவது.

அப்பர் சுவாமிகளின் திருவேடப்பொலிவைக் குறிப்பிக்கும் பெரிய புராணத் திருவிருத்தங்களாவன:—

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே

மார்பாரப்பொழி கண்ணீர் மழை வாருந் திருவடிவும் மதுரவாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமு முழவாரத் தனிப்படையுந் தாமுமாகிப்
பார்வாழத்திருவீதிப் பணிசெய்துபணிந்தேத்திப்பாவிச்செல்வார்.

சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தனிலசைவுங்
கந்தைமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய.

துதி.

"பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமன் கடல கத்திடு
வெய்யகற் றேணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தாள் தொழுது போற்றுவாம்.

———

௯. சுந்தரர்.

நேசநிறைந்த வுள்ளத்தால் நீலநிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை யெல்லாவுயிருந் தொழவெடுத்துத்
தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.

திருமுனைப்பாடி நாட்டிலேயுள்ள திருநாவலூரிலே சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் சடையனாரென்னும் ஆதிசைவ ரொருவர் இருந்தார். அவருடைய மனைவியார் இசைஞானியா ரென்பவர். இவர்களுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அப் பிள்ளைக்கு நம்பியாரூரர் என்று பெயர் வைத்தனர். அந்நாட்டரசராகிய நரசிங்க முனையரால் அப்பிள்ளை வளர்க்கப் பட்டது.

மணஞ் செய்யத்தக்க வயதை யடைந்தபோது புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாது மகளை விவாகஞ்செய்ய நாள் குறிக்கப்பட்டது. திருமணச் சடங்குகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சிவபெருமான் ஒருகிழப் பிராமணவேடத்தோடு வந்து, அக் கலியாண வீட்டிலுள்ளவர்களை யெல்லாம் கூவி யழைத்துத் தமக்கும் மணமகனாகிய நம்பியாரூரருக்கும் ஓர் வழக்குளதென்றும் அதை முடித்தபிறகே மணத்தைத் தொடங்கவேண்டு மென்றும் கூறினர். நம்பியாரூரர் அவர் கூற்றுக்குச் சம்மதித்தார். கிழவர் ஆரூரர் தமக்கு அடிமையென்றும் அப்படி அடிமையென்று மெய்ப்படுத்த அவரது முன்னோர் தமக்கு எழுதிக்கொடுத்த அடிமைக் கைச்சாத்தோலை தம்மிட முளதென்றும் சொன்னார். பிராமணர்கள் அடிமையாதல் உலக வழக்கில் இல்லையென்று சொல்லி அங்குள்ளோர் வாதிக்கக் கிழவர் தம்மிடமிருந்த ஓலையை அவர்களுக்குக் காட்டித் தம்வழக்கை உண்மைப் படுத்தினார். நம்பியாரூரர் கிழவருடைய ஏவல்வழி நிற்பாராகி அவர்பின்னே சென்றார். முன்சென்ற கிழவர் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருட்டுறை என்னுஞ் சிவாலயத்திற் புகுந்த வுடனே மறைந்தருளினர். உயிர்தோறும் கலந்துநிற்கும் கள்வராகிய கிழவரைத் தேடுவாராயினர். நம்பியாரூரர் அப்போது பரமசிவன் அவருக்குக் காட்சிகொடுத்தருளி அவரை இல்

வாழ்க்கையி லிருந்து உய்விக்கும் பொருட்டுத் தாமே வலியவந்து தடுத்தாட்கொண்டதாக அறிவித்தருளினார். நம்பியாரூரர் கடவுளைப் புகழ்ந்துபாட விருப்ப முடையவராகி பித்தா பிறைசூடி என்னுந் தொடக்கத்தையுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருமணத்தைத் தவிர்க்கக் கிழவராகச் சிவபெருமான் எழுந்தருளி நம்பியாரூரருடன் வல்வழக்கிட்டபோது, அவரை இன்னவரென்று அறியாது "பித்தன்" முதலிய பலவகைச் சொற்களை நாயனார் கூறினமையால் "வன்றொண்டன்" என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று.

நாயனார் திருநாவலூர் திருத்துறையூர் முதலிய கோயில்களைப் பாடியருளிச் சிதம்பரத்தைநோக்கிப் புறப்பட்டார். வழியிலே திருவதிகையில் தங்கினர். அங்குள்ள ஒரு மடத்திலே நித்திரைசெய்யும்போது பரமபதி நாயனாருக்குத் திருவடி தீட்சை செய்தருளினார். பின்னர்த் திருமாணிகுழி திருத்திணைநகர் முதலிய திருப்பதிகளை வணங்கிக்கொண்டு சிதம்பரத்தை அடைந்தார். அங்கே தங்கியிருக்கும்போது சபாநாதர் திருவருளால் திருவாரூருக்குச் செல்லும்படி ஓர் கட்டளை பிறந்தது. அதன்படியே திருவாரூருக்குப் புறப்பட்டார். வழியிலேயுள்ள சீகாழி, மாயூரம் அப்பர்மாகாளம், திருப்புகலூர் முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவாரூரைச் சமீபித்தார். நாயனாரது வருகையை வன்மீகநாதராலறிந்த திருவாரூர் அடியவர் கூட்டத்தினர் அவரை எதிர்கொண்டு உபசரித்தனர். நாயனார் திருக்கோயிலினுள்ளே போய்த் திருமூலட்டானேசுரரை வழிபட்டுத் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவாரூரிலே யிருந்து தியாகராசப் பெருமானைத் தரிசித்து வருநாளிலே ஒருநாள் திருவருள்கூட்டப் பரவையார் என்னும் சிவநேயம்வாய்ந்த பெண்மணியைக் கண்டார். கண்டதும், அவர் பக்குவமுள்ள ஆன்மாவென அறிந்து, சுவாமி சந்நிதானத்திற்குச் சென்று, அப் பெண்ணை ஆட்கொள்வதற்கு உத்தரவு தந்தருளும்படி இறைவனை வேண்டினர். சுவாமிகளைக் கண்ட பரவையாரும் அவரே தம்மை ஈடேற்றத்தக்கவரென நினைத்தார். சிவபிரானது கட்டளைப்படி சுவாமிகள் அம்மையாரை ஆட்கொண்டருளினார்.

நாயனார் திருவாரூரிலே வசித்துவரும் காலத்திலே ஒருநாள் தேவாசிரய மண்டபத்திலுள்ள சிவனடியார்களைத் தொழுது அவர்கள் பெருமையைச் சிறப்பித்துத் திருத்தொண்டத் தொகை பாடியருளினார். அத் திருப்பதிகத்திற்கு வன்மீக நாதர் "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தருளினார்.

நாயனார் திருவாரூரிலே வசித்துவந்தபோது அவர் வீட்டிற்கு வேண்டிய நெல்லும் பருப்பும் குண்டையூர்க் கிழவர் என்னும் சிவனடியார் உதவினர். அப்படி அவர் கொடுத்துவரும்போது மழையின்மையால் வளம் சுருங்கிற்று. போதிய தானியங்கள் அனுப்ப முடியவில்லை. அப் பெரியவர் மனம் புழுங்கினார். சுவாமி திருவருளால் அக் குண்டையூர் முழுவதும் நெல் மலைபோற் குவிந்தது. சிலநாட் சென்றபின், திருநாட்டியத்தான் குடிக்குச் சென்று அங்குள்ள கோட்புலி நாயனாரை ஒரு திருப்பதிகத்திலே சிறப்பித்துப்பாடி, வலிவலம் முதலிய தலங்களை வணங்கித் திருவாரூருக்குத் திரும்பிவந்தார். பங்குனி உத்திரத் திருநாள் நெருங்குதலும் திருவிழாவைக் காணவரும் சிவனடியார்களது மாகேசுர பூசைச் செலவிற்காகப் பொன்வேண்டித் திருப்புகலூரையடைந்து அங்கே இறைவன் திருவருளால் செங்கற்களைப் பொன்கற்களாக மாற்றித் திருவாரூருக்கு மீண்டார்.

பின் பல தலங்களுக்குச்சென்று திருமுதுகுன்றெனப்படும் பழமலைக்குப் போனார். அங்கே விருத்தகிரிநாதர் பன்னீராயிரம் பொன் கொடுத்தருளவும், அவற்றை மணிமுத்தா நதியிலே இட்டனர். பிறகு கடம்பூர், சிதம்பரம், மண்ணிப்படிக்கரை முதலிய தலங்களை வணங்கித் திருவாரூரைச் சேர்ந்தார். அங்கே அனைவரும் ஆச்சரியப்படும்படி தாம் ஆற்றிலிட்ட பொன்னையெல்லாம் திருவாரூர்க் கமலாலயத்திலே வரப் பெற்றார்.

சிலநாளாயபின், திருநள்ளாறு முதலிய தலங்களுக்குப்போய்த் திருக்குருகாவூரை அடைந்தார். அங்கே இவரது நண்பராகிய பரமபதி தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவந்து கொடுத்தார். மற்றும்பல கோயில்களுக்குச் சென்று கடைசியாகத் திருவொற்றியூரை அடைந்தார்.

திருவொற்றியூர் நாதரை ஒருநாள் தரிசித்துத் திரும்பும்போது, அத் திருக்கோயிலிலே திருத்தொண்டு புரிந்துவந்த சங்கிலியார் என்னும் தவப்பெருஞ் செல்வியைத் திருவருள்கூட்டக் கண்டார். அவரைத் தமக்கு அடியாராகக்கொண்டு வேண்டியகாலம் வரையும் அவரோடு நிற்பதாகச் சொல்லித் தங்கினார். ஒருநாள் திருவாரூர்த் தியாகராசப் பெருமானாரது ஞாபகம் வரவும், அவர்மீது திருவொற்றியூரிலிருந்தபடியே ஒரு திருப்பதிகம் பாடியருளினார். பின்னர் ஒருநாள் அவரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேரவாவினால் உந்தப்பட்டவராய்த் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். திருவொற்றியூரின் எல்லையைக் கடந்ததும் இவருடைய இரண்டு கண்களும் மறைந்தன. காரணம் சங்கிலியாரோடு வேண்டிய காலம் நில்லாது போயதே. நாயனார் இறைவனைப் பல விதமாகத் துதித்தார்; கண்ணொளி வரவில்லை.

எவ்விதமேனும் திருவாரூருக்குப் போய்த்தீரவேண்டும் என்னும் ஆசை மிகுதியால் வடதிருமுல்லைவாயில், திருவெண்பாக்கம், திருவாலங்காடு முதலிய தலங்களை வணங்கிக் காஞ்சீபுரத்தை அடைந்தார். எகாம்பர நாதரைத் தரிசிப்பதற்குக் கண்ணில்லாமையால் மிக வருந்திக் கடவுளைப் பலவாறு வேண்டினார். வேண்டுகோட்கிணங்கிய எகம்பவாணர் இடக்கண்ணை மாத்திரம் கொடுத்துத் தரிசிப்பித்தார்.

பிறகு, திருவாமாத்தூர் திருவாத்துறை, திருவாவடுதுறை முதலிய தலங்களைப் பாடிச்சென்று திருவாரூரை யடைந்து அப்பெருமான் மீது "மீளா அடிமை" என்னும் திருப்பதிகம் பாடினார். வன்மீகநாதர் வலக்கண்ணையுங் கொடுத்தருளினார். நாயனார் சில நாள் தேவாசிரய மண்டபத்திலும் பின்பு பரவையார் வீட்டிலும் கடவுளைத் தியானித்துக்கொண்டு வீற்றிருந்தருளினார்.

திருமங்கலம், திருப்புன்கூர் முதலிய கோயில்களுக்குப் போய், மீண்டும் திருவாரூருக்கு வந்திருந்த நாளிலே நாயனார் பெருமையைக் கேள்வியுற்ற சேரமன்னராகிய சேரமான்பெருமாள் நாயனார் அவரைக்காணத் திருவாரூருக்கு எழுந்தருளினார். வந்ததும் நாயனாரை வணங்கி அவருடன் மிக நட்புடையவராயினார்.

இதனால் நாயனாருக்குச் "சேரமான் தோழர்" என்னும் பெயர் உண்டாயிற்று. பின்பு இருவருமாகப் பாண்டிநாட்டிலுள்ள பல தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று மீண்டும் திருவாரூரை அடைந்தனர். சேரர்பிரான் நாயனாரைத் தமது நாட்டிற்கு அழைத்தார். நாயனார் உடன்படவும் இருவருமாக மலைநாட்டுக்குப் பிரயாணமாயினர். வழியிலேயுள்ள திருவையாற்றைத் தரிசிக்கச் சேரமான் விரும்பினார். அப்போது வழியிலேயுள்ள காவேரிநதி ஓடங்கள் செல்ல முடியாதபடி பெருக்கெடுத்துப் பாய்ந்தது. சுந்தரர் ஐயாற்றுப்பாணரை விளித்து ஒரு திருப்பதிகம் பாடினார். அவர் "ஓலம்" என்று அருள்சுரந்து காவேரி நதியை விலகி வழி விடும்படி பணித்தனர். இருவரும்நதியைக் கடந்து சென்று செம்பொற்சோதியை வணங்கி மீண்டனர். மீண்டதும் முன்போலக் காவேரியாறு கரைபுரண்டு ஓடிற்று. பிறகு இருவரும் கொடுங்கோளூரை அடைந்தார்கள். அங்குச் சிலநாள் தங்கினர்.

ஒருநாள் வன்மீக நாதரை நினைந்து திருவாரூருக்குச் செல்லப் புறப்பட்டார். சேரமான் அவரைப்பிரிய மனமில்லாதவராய்த் தடுப்பவும் நாயனார் தியாகேசரைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆசைமிகுதியால் சேரர்தடைக்கு இணங்காது திருவாரூரை வந்தடைந்தார்.

சிலநாட்சென்ற பின்னர் சேரமான் பெருமானை நினைந்து அவரிடஞ் செல்லத் திருவாரூரிலிருந்து புறப்பட்டார். வழியிலேயுள்ள திருப்புக்கொளியூரைச் சேர்ந்தபோது அங்கே நிகழ்ந்த சம்பவங்களால் ஒரு பிராமணச் சிறுவன் சில ஆண்டுகளுக்கு முன் முதலையால் விழுங்கப்பட்டானென்று கண்டார். கருணைமேலீட்டினால் அச் சிறுவனை எழுப்பத் திருவுளங்கொண்டு அவிநாசியை அடைந்து அக் கோயிலில் வீற்றிருக்கும் சிவபிரானார் மீது ஒரு திருப்பதிகம் பாடியருளினார். உடனே ஒரு முதலை அச்சிறுவனைக் கொண்டுவந்து குளக்கரையில் உமிழ்ந்தது. எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். பிறகு அவ்விடத்தை விட்டு மலைநாட்டுக்குச் சென்றார். இவர்வரவை யறிந்த சேரமான் பல வரிசைகளுடன் இவரை எற்றருளினார்.

சேரமன்னரது இராசதானியாகிய மகோதை என்னும் நகரத்திலே நாயனார் எழுந்தருளி யிருக்கும்போது ஒருநாள் திருவஞ்சைக் களத்துக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்து மெய்ம் மறந்து தம்மை இறைவனது திருவடியிற் சேர்த்தருளும்படி பன்முறை இறைஞ்சினார். இவர் விருப்பத்தை நிறைவேற்றச் சிவபிரான் ஓர் வெள்ளையானையை அனுப்பி அதன்மீது இவரை ஏற்றி யழைத்து வரும்படி தமது பூதகணங்களுக்குக் கட்டளை யிட்டார். அங்ஙனமே ஒரு வெள்ளையானை திருவஞ்சைக் களத்திற்கு வரவும், நாயனார் அதன்மீது ஏறித் தமது தோழராகிய சேரமான்பெருமானை நினைத்தவண்ணம் கயிலையை நோக்கிச் சென்றார். அப்போது நீராடிக்கொண்டிருந்த சேரர்பெருமான் தமது தோழருடைய கொள்கையை ஞானக்கண்ணா லறிந்து உடனே ஒரு குதிரையின் மேல் ஏறிக்கொண்டு திருவஞ்சைக்களத்திற்குப் போனார். அங்கு ஆகாய வழியாகச் செல்லும் சுந்தரரைக்கண்டு தமது குதிரையின் செவியில் பஞ்சாட்சரத்தை ஓதி யருளினார். அக் குதிரை உடனே ஆகாயத்திற் பாய்ந்து சுந்தரர் செல்லும் யானைக்குமுன் விரைந்து ஓடிற்று. இருவரும் திருக்கைலாசத்தை அடைந்து கைலாசபதியாகிய சிவபிரானை இறைஞ்சித் தங்கள் தங்கள் பழைய நிலைமைகளாகிய ஆலால சுந்தர பதவியையும், கணநாதப் பதவியையும் முறையே அடைந்தார்கள். இருவரும் முத்தியடைந்த தினம் ஆடிச் சுவாதியாகும். நாயனார் முத்தியடைந்தபோது அவருக்கு வயது 18 என்ப. சுந்தரர் பாடிய திருப்பாடல்களும் தேவாரத்திற் சேர்ந்தவை. இவருடைய பாடல்கள் ஏழாவது திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. இவருடைய பாடல்கள் மதுரம் பொருந்தியவை. பல திருப்பாடல்களுள் திருக்குறட் கருத்தும் அடிகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. நிலையாமையைப் பற்றி இடித்துக் கூறுவன பல. இவர்பாடிய திருப்பதிகத்தொகை ௩௮௦௦௦. இப்போது வழங்குவன ௧௦௦. நிந்தாஸ்துதிகளாகவும் சில பாடல்களைக் காணலாம்.

கைலாசத்தில் அணுக்கத் தொண்டராயுள்ள ஆலால சுந்தரரே அடியார் பெருமையை விளக்குவதற்குச் சுந்தரராக அவதரித்தாரென்ப. நாயனார் திருத்தொண்டத்தொகை பாடாமலிருந்தால்

எமக்கு அடியார்கள் பெருமை தெரிந்திராது. அத் தொகையே பின்வந்த திருத்தொண்டர் திருவந்தாதி பெரியபுராணம் முதலியவற்றிற்கு வழிகாட்டியா யிருந்தது. திருத்தொண்டத் தொகையாளி என்னும் பெயரும் நாயனாருக்கு இதனாற் கிடைத்தது. இவர் ஞானத்தில் யோக மார்க்கத்தை விளக்கவந்தவர். மூலாதாரமாகிய திருவாரூருக்கு இறைவனால் அழைக்கப்பட்டு அங்கே பன்னெடுநாள் வசித்ததும் திருத்தொண்டத் தொகை முதலியன அங்கே இறைவனருளாற் பாடியதும் சிவபிரானோடு தோழமை பூண்டதும் கருதத்தக்கன. திருவாரூர்த் தியாகேசரிடம் இவருக்கு அன்பதிகமென்பது இவரது தேவாரப் பாக்களால் அறியலாம். திருவொற்றியூரிற் சில காலம் தங்கியபோதும் மலைநாட்டில் சேரமான் பெருமானோடு சிலநாள் நின்றபோதும் வன்மீகப் பெருமானை நினைந்துருகி உடனே திருவாரூருக்குப் புறப்பட்டது இவ்வன்பை வெளிப்படுத்தும்.

திருவாரூரில் இருந்தபோது பரவையாரென்னும் ஓர் பக்குவமடைந்த ஆன்மாவைத் திருவருட் சம்மதப்படி ஆட்கொண்டு தமக்கு அடியவராக்கி அவரோடு பல தொண்டு புரியலானார். இவ்வாறே சங்கிலியா ரென்னும் மற்றொரு பக்குவ ஆன்மாவையும் திருவொற்றியூரில் இறைவன் அனுமதியோடு ஆட்கொண்டு அருள்புரிந்ததுமாகும். இரு ஆன்மாக்களையும் யோகப் பயிற்சியிற் பழக்குவித்தாரென்பது பெரிய புராணத்தில் நுணுகி அறியற்பாலது. “மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம் பாவித்தேன்” “வழுக்கிவீழினுந் திருப்பெய ரல்லாமல் மற்றுநானறியேன்” “நற்றவா உனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே” முதலிய தேவார அடிகளால் நாயனாருடைய சிந்தனை எப்போதும் சிவபெருமானிடத்திலேயே பதிந்துகிடந்ததென்பது பெறப்படும். இவர் பசுகரணமற்றுச் சிவகரணமுற்று விளங்கியவராகலின் தமக்கென ஒரு செயலு மில்லாதவர்; இவர் செய்த திருவிளையாடல்களெல்லாம் இறைவனைச் சார்ந்தவையே. சிதம்பர சபாநாதனைத் தரிசித்தபோது இவரடைந்த நிலையைப் பெரியபுராணம் ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, தெண்ணிலா மலர்ந்த வேணியாய், என்னும் திருவருட் பாக்களால் நனி விளக்குகின்றது.

தமது ஆண்டவரும் தோழரும் யோகநாயகருமாகிய சிவபிரானைப் போல சுவாமிகளும் யோகியே. இதனாலன்றோ பரமயோகியாகிய பெருமிழலைக் குறும்ப நாயனாரும் நமது சுவாமிகளைக் குருவாகக் கொண்டு வழிபட்டது. எல்லாம் வல்ல சித்தாகிய சிவபிரானே இவர்வழி நிற்பவராகலின், செங்கல்லைப் பொன்னாக ஆக்குவதும், முதலையுண்ட பாலனை அழைப்பதும் ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுப்பதும் பெருக்கெடுத்தோடும் ஆற்றை வழிவிடச் செய்வதும் அதிசயமல்ல. "யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி" என்னும் தேவாரத்தால் எம்பெருமான் இவரோடு எல்லாக் காரியத்திலும் தொடர்புடையா ரென்பது புலப்படும். இவர் திருவொற்றியூர் எல்லையை நீங்கியதும் கண்ணிழந்தமையும் பிறகு கண் பெற்றமையும் திருவிளையாடலாகும். சிவபெருமான் சம்பந்தரை மகன்மைகொண்டு பிள்ளைத் தன்மைக்குரிய முத்துப் பல்லக்கு, முத்துக்குடை, முத்துச் சின்னம், முத்துப் பந்தர் முதலியவற்றை அமைத்துக் கொடுத்து அவரை ஆடம்பரமாக விளங்கச் செய்தார். அஃதேபோல் சுந்தரரோடு தோழமை பூண்டு அத்தோழமைக்கு எற்ப பொன், பொருள், பட்டாடை, வாகனம் முதலிய பரிசுகளை வழங்கி எப்போதும் மணக்கோலத்தோடு உலாவும்படி பணித்தருளினர். ஈதெல்லாம் இறைவனுடைய அருட் டிறமெனச் சொல்லத் தக்கது.

காவலராகிய சேரமான் பெருமான் நாவலராகிய சுந்தரமூர்த்திகளின் தோழமையை நாடினமையால் அவரும் யோகீந்திரராய் இருத்தல் வேண்டும். அவர் பூசைமுடிவில் நடராசப்பெருமானது காற்சிலம்பொலி கேட்பது இதனை மெய்ப்பிக்கும். சுந்தரர்கைலாசத்திற்கு யானைமீது எறிச் செல்வதையறிந்த சேரர் தமது குதிரையின் காதில் பஞ்சாக்கரத்தை ஓதவும் அதுவிரைந்து யானைக்கு முன்னே ஓடிற்றென்பது பௌராணிகம். ஆன்மாவாகிய அம்பைக் கடவுளாகிய இலக்குக்குச் செலுத்துவது பிரணவமாகிய வில் என்று முண்டகோபநிடதம் கூறுகின்றது. (II-ii-4) இங்கே குதிரையாக உருவகிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் எறிச்சென்ற வெள்ளையானை பிரணவமாம். ஈதெல்லாம் நுணுகி அறியத்தக்கது.

கோட்புலிநாயனார் தமது அரிய புதல்விகள் இருவரையும் சுவாமிகளிடத்தே விட்டு அவர்களை அடிமைகொள்ளும்படி வேண்டினார். அவர்கள் இளமையையும் பக்குவமின்மையையும் கண்ட நாயனார் அவர்களுக்குப் பரிசதீட்சை மட்டும் புரிந்தார். இதனால் இவ்விரு ஆன்மாக்களும் பரவை சங்கிலியாரைப்போல் பக்குவநிலையை அடையவில்லையென்பது பெறப்பட்டது.

நமது சுவாமிகளுக்கு வழங்கும் பெயராவன:—நம்பியாரூரர், திருநாவலூரர், ஆளுடைய நம்பி, வன்றொண்டர். தம்பிரான் தோழர், சேரமான்தோழர், திருமணக்கோலப் பெருமான், திருத்தொண்டத்தொடையாளி, சிங்கடியப்பன், வனப்பகையப்பன் முதலியன.

நாயனார் காலத்தில் இருந்த மெய்யடியவர்:—விறன்மிண்டர், பெருமிழலைக்குறும்பர், எயர்கோன்கலிக்காமர், சோமாசிமாறர், சேரமான்பெருமான், நரசிங்கமுனையரையர், கோட்புலியார், சடையனார், இசைஞானியார் முதலியோர்.

பெருமிழலைக்குறும்பநாயனார் நமது சுவாமிகளிடத்துப் பேரன்புடையவர். அவரை வழிபடுதல் ஒன்றினாலேயே முத்தியடைந்தாரென்றால் நாயனாரின் பெருமையை என்னென்று இயம்புவது.

நாயனார் சரித்திரத்தைக் கூறும் நூல்களாவன:—பெரியபுராணம், திருநாவலூர்ப் புராணம், திருவாரூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், திருத்துருத்திப் புராணம், அவிநாசிப் புராணம் முதலியன.

துதி.

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதால்
இறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலோன்
றறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்.

௪. மாணிக்கவாசகர்.

**பேசுபுகழ்வாதவூர்ப்பிறந்துபெருந்துறைக்கடலுண்டு
ஆசிலெழிறடித்தயாவஞ்சேழத்தாலதிர்ந்தேழந்து
தேசமலிதரப்போதுவார்சிவபோகமிகவிளைவான்
வாசகமாமாணிக்கமழைபொழிமாழகில்போற்றி.**

மாணிக்கவாசகர் பாண்டிநாட்டிலே வைகையாற்றங் கரையிலே மதுரைக்குச் சமீபத்திலுள்ள திருவாதவூர் என்னும் திருப்பதியிலே ஆமாத்தியப் பிராமண குலத்திலே பிறந்தவர். இவரது இயற்பெயர் திருவாதவூரார். தந்தையாரின் பெயர் சம்புபாதாசிரியர். தாயாரின்பெயர் சிவஞானவதி. இவர் பதினாறு ஆண்டுகளுக்குள்ளாகவே வேதசிவாகமங்களையும் பல கலைகளையுங் கற்றுத் தெளிந்த அருட்புலமையினராய் விளங்கினார். அதனோடு சிறந்த ஒழுக்கமும் நிறைந்த சிவபத்தியும் உடையவராகக் காணப்பட்டார். இவரது குணாதிசயங்களைக் கேள்விப்பட்ட அரிமர்த்தனபாண்டியன் இவரைத் தனது முதல் மந்திரியாக ஆக்கிக்கொண்டான். தென்னவன் பிரமாராயன் என்னும் பட்டப்பெயரைச் சூட்டினான். இப்பெயருடன் மந்திரிப்பதவியை ஏற்றுக் குறைவற நடாத்தும்போது, இவருக்குச் சிவபத்தியும் உலகத்தின்மீது வெறுப்பும் மேலிட்டன. இச்சமயத்திற் பாண்டியன் இவரை அழைத்து கீழ்க்கடற்றுறைக்குச் சென்று நல்ல குதிரைகளை வாங்கிவரும்படி பெரும் பொருள் கொடுத்து அனுப்பினான். புறப்படுமுன் திருவாலவாயிலே எழுந்தருளியுள்ள சோமசுந்தரக்கடவுள் சந்நிதானத்தை அடைந்து, குதிரையின்பொருட்டு ஈனர்களாகிய மிலேச்சர்களுக்கு அரசனுடைய பொருள் செல்வதைப்பற்றித் துக்கத்துடன் விண்ணப்பித்தனர். கடவுளின் உத்தரவு பெற்றபின் மதுரையை விட்டுப் புறப்பட்டுச் சோழதேசத்தை நோக்கிச் சென்றார். சென்றவர் வழியிலேயுள்ள திருப்பெருந்துறை என்னுந் தலத்திலே தங்கினார். அங்கே ஒரு ஞானாசாரியர் குருந்தமரத்தின்கீழ்ப் பல மாணவர் சூழ வீற்றிருப்பதைக் கண்டார். கண்டவுடன் ஆனந்தபரவசமானார். பின்பு, தம்மை ஆட்கொண்டருளும்படி பரமாசாரியரை வேண்டினார். இவருடைய மேலான நிலையைக் கண்ட ஞானாசாரியாகிய கடவு

ளும் இவர் விரும்பியவாறே ஞானோபதேசத்துடன் திருவடிதீக்ஷையும் செய்தருளினார்.

ஞானோபதேசம் பெற்ற பின்பு, சிவானந்தமேலீட்டினாலே அதிமதுரமான பாடல்களைப் பாடுவாராயினர். அப் பாமாலை விலையுயர்ந்த மாணிக்கக் கற்களாற் கோக்கப்பட்ட சரமாலையைப்போல் இருந்தமையால் சிவபிரான் இவருக்கு மாணிக்கவாசகர் என்னுந் திருநாமத்தைக் கொடுத்தார். குதிரை வாங்குதற்காகக் கொண்டுவந்த பொருளை யெல்லாம் திருப்பெருந்துறையிலே சிவாலயத் திருப்பணியிலும் சிவனடியார் வழிபாட்டிலும் செலவழித்தார். தாம் வந்த காரியத்தையும் மறந்து பித்தம்பிடித்தவர்போல் இருந்தார். தம்முடன் வந்த பரிவாரங்கள் என்ன சொல்லியும் இவர் கேட்டாரல்லர். இவர் இப்படி நடப்பதை அவர்கள் பாண்டியனிடம் போய் முறையிட்டார்கள். இவரது நிலைமையைக் கேள்வியுற்ற பாண்டியன் சுவாமிகளை உடனே மதுரைக்குத் திரும்பும்படி கடிந்தெழுதிய ஓலையொன்றை அனுப்பினான். அவ்வோலையைத் தமது ஆசாரியமூர்த்தியாக எழுந்தருளியிருந்த இறைவனுக்குக் காட்டினர். அவர் அடுத்த ஆவணி மூலத் திருநாளன்று குதிரைகளைத் தாமே மதுரைக்கு ஓட்டிக்கொண்டுவருவதாகவும், மாணிக்கவாசகர் மதுரைக்குச் சென்று அங்ஙனமே பாண்டியனுக்கு அறிவிக்கலாமென்றுங் கூறினர்.

சுவாமிகள் உடனே மதுரைக்கு மீண்டு, இறைவன் சொல்லியவாறு பாண்டியனுக்குத் தேறுதல் சொன்னார். அரசனும் ஆவணி மூலத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். அச்சமயத்தில் மந்திரிமார்களில் ஒருவன் அரசனிடஞ் சென்று முதன் மந்திரியார் குதிரை வாங்குதற்குக் கொண்டுபோன பொருளையெல்லாம் சிவனடியார்கள் பொருட்டுத் திருப்பெருந்துறையிற் செலவழித்துவிட்டனரென்றும், அதனால் அவர் குதிரை வாங்கவில்லையென்றும் சொன்னான். அவன் கூறியவாறே அவ்விடத்தில் குதிரைகள் இல்லாமையை அறிந்த அரசன் நாயனாரைச் சிறையிலிடுவித்து அவர் கொண்டுபோன பொருளையெல்லாம் வாங்கும்படி கட்டளையிட்டான். ஏவலாளர்கள் சுவாமியை வருத்தினார்கள். அவர் சிறிதும்

மனங்கலங்காமல் சிவபிரானைத் துதித்தவண்ணமா யிருந்தார். இதனால் அவருக்குச் செய்யப்பட்ட துன்பங்க ளொன்றும் அவரைச் சிறிதும் தாக்கா தொழிந்தன.

இப்படி நடந்துவரும்போது ஆவணி மூல நாள் நெருங்கியது. பரமசிவன் குதிரைச் சேவகர் வேடம் பூண்டு குதிரைகளுடன் மதுரைக்கு எழுந்தருளினார். குதிரைப் பந்திகளின் வரவைக் கண்ட பாண்டியன் மகிழ்ச்சியடைந்து மாணிக்கவாசகரைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்து அங்கு வந்த குதிரைகளைத் தானும் அவருமாகப் பரீக்ஷை செய்தனர். குதிரைகள் சிறிதும் இலக்கணப்பிழை யில்லாமையைக் கண்டு மகிழ்ந்தான் அரசன். பிறகு, குதிரைவீரராக எழுந்தருளிய சிவபிரானிடம் அவற்றைக் கயிறுமாற்றி வாங்கிக் கொண்டு அவருக்கு விடையளித்து அனுப்பினான். ஆயினும் அன்றிரவே அக்குதிரைகளெல்லாம் நரிகளாக மாறின. முன்னிருந்த குதிரைகளையும் இந்நரிகள் கடித்துக் கொன்றன. இதனை அறிந்த பாண்டியன் இது மாணிக்கவாசகர் செய்த சூழ்ச்சியென்று கருதி அவரை மறுபடியும் துன்பப்படுத்துவானாயினான். அவன் செய்த துன்பமொன்றும் அவரைத் தாக்கவில்லை.

அடியார்க்கு எளியவராகிய சிவபெருமான் நாயனாருக்குச் செய்த அநீதியை ஒழிக்கவும், செம்மனச்செல்வி யென்னும் மூதாட்டியின் சிவபத்தியை உலகத்தாருக்குக் காட்டவுந் திருவுளங்கொண்டு வைகையாற்றை மதுரைமாநகரின்மீது பெருக விடுத்தார். அது மேலும் மேலும் நகரையே அழிப்பதுபோலப் பெருகி ஓடிற்று. இதை அறிந்த பாண்டியன் சொக்கலிங்க மூர்த்தியைப் பலவாறு போற்றினன். வெள்ளம் சிறிதுங் குறையவில்லை. பெருக்கிற்குக் காரணம் தான் மாணிக்கவாசகருக்குத் துன்பஞ் செய்ததே என்று எண்ணி அவரைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்துத் தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டினான். வைகைக் கரை அடைப்பித்தற்கும் அவருடைய துணையை நாடினான். வேண்டுதல் வேண்டாமையிலாத நாயனார் சிவபிரானிடம் பதிந்த உள்ளத்தினராய் நகரிலுள்ளார் அனைவருக்கும் வைகைக் கரையை அடைக்கும் பொருட்டுப் பங்கிட்டுச் சிறிது சிறிது பாகமாக ஒவ்வொருவருக்கும் அளவிட்டார். அவர் ஏவியபடியே நகரத்தார் தத்தம் பாகக் கரையை அடைத்தனர்.

ஆயினும் சிவபத்தசிரோமணியாகிய செம்மனச்செல்வி யென்னும் பிட்டுவாணிச்சியின் பங்குமாத்திரம் அடைக்கப்படாம லிருந்தது. இதையறிந்த அரசனுடைய ஏவலாளர்கள் அம்மையாரை வற்புறுத்துவாராயினர். இதனால் வருந்திய அம்மையார் சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலை யடைந்தார். தம்முடைய பிட்டைக் கூலியாக ஏற்றுத் தமது பங்கை அடைப்பா ரில்லாமையையும், தமக்குப் பந்து மித்திரர்க ளெவரும் இல்லாமையையுங் கூறி முறையிட்டார். சிவபிரான் அம்மையாரில் இரங்கித் தாமே கூலியாளாக எழுந்தருளிவந்து அவர் கொடுத்த பிட்டை வாங்கி யுண்டு வைகைக் கரையை அடைப்பவர்போல் நடித்தார். அம்மையாருடைய பங்கு அடைக்கப்பட்டதாயினும் மற்றவர்களுடைய அணையின் உயரத்தளவு வாராமையைக் கண்ட அரசன் கூலியாளாக வந்த கடவுளைப் பிரம்பினால் அடித்தான். அப்பிரம்படியானது பாண்டியன்மேலும் ஏனையோர்மேலும் பட்டது. இவையெல்லாம் தம்மடியவராகிய மாணிக்கவாசகர் பொருட்டுச் சிவபிரான் புரிந்த திருவிளையாடல்களென்று பாண்டியன் அறிந்தான். பின்பு, அவரிடம் சென்று தான் அறியாமை காரணமாகச் செய்த பிழைகளைப் பொறுத்துத் தன் னரசாட்சியை ஏற்றருளும்படி வேண்டினன். அவர் அவ்வேண்டுகோளை மறுத்துச் சிவவேடம் பூண்டவராய்த் திருப்பெருந்துறைக்கு எழுந்தருளி அங்கே சிலகாலம் வசித்தார். பிறகு திருவுத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களை வணங்கி, அவ்வவ்விடங்களில் திருவாசகப் பாக்களைப் பாடியருளினார். கடைசியாகச் சிதம்பரத்தை அடைந்தார்.

சுவாமிகள் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த நாளிலே, சோழதேசத்துச் சிவபத்தர் ஒருவர் தலயாத்திரையாக இலங்கைக்குப் போனார். அவர் அடிக்கடி "பொன்னம்பலம் வாழ்க" என்று சொல்லுவது வழக்கமா யிருந்தது. அவர் அப்படிச் சொல்லுவதைக் கேள்வியுற்ற அந்நாட்டுப் புத்த அரசன் அவரை வரவழைத்தான். அவர்மூலமாகச் சிதம்பரத்தின் சிறப்பை அறிந்தான். சிதம்பரத்திலுள்ள சிவாலயத்தை இடித்தொழித்து அந்த இடத்தில் பௌத்தாலயம் ஒன்று கட்டவேண்டுமென்னும் எண்ணம் அவ

னுக்கு உண்டாயிற்று. ஆகவே அவன் பௌத்த குருவோடும் தன் ஊமை மகளோடும் சிதம்பரத்துக்குப் போனான். போனதும் தில்லைவாழந்தணர்களை வாதத்திற்கு அழைத்தான். பௌத்த குருவோடு வாதஞ்செய்யத்தக்க ஆற்றலுள்ளவரைத் தில்லையிலுள்ளார் தேடுவாராயினர். அப்போது நடராஜப்பெருமான் அவர்களுக்கு மாணிக்கவாசகரைக் குறிப்பிட, உடனே அவரை வரவழைத்தனர். சுவாமிகள் புத்தனுடன் வாதஞ்செய்து அவனை வென்றதுமன்றி. அவன் கேட்ட வினாக்களுக்குப் பிறவிதொட்டு ஊமையாயிருந்த பௌத்த அரசனது மகளைக்கொண்டு விடை சொல்லுவித்தார். வினாவும் விடையும் சுவாமிகள் பாடியருளிய திருச்சாழலிற் காணலாம். பௌத்தரெல்லாம் தமது சமயத்தின் புன்மையைக் கண்டு சைவராயினர்.

சுவாமிகள் சிதம்பரத்தில் வசித்துவரும் நாளிலே அவருடைய திருவாசகத்தைப் பரவச்செய்யவேண்டுமென்னும் பெருங் கருணையினாலே சிவபிரான் பிராமண வேடத்தோடு அவரிடம் எழுந்தருளினார். அவர் சொற்படி திருவாசகம் முழுவதையும் எழுதிக்கொண்டு திருச்சிற்றம்பலமுடையார்மீது ஒரு திருக்கோவைப் பிரபந்தமும் பாடுவித்தார். அக்கோவையையும் எழுதித் தமது திருக் கைச்சாத்திட்டருளிச் சிதம்பர சிற்சபை வாயிலிலுள்ள பஞ்சாக்கரப் படியிலே சுவடிகளை வைத்தருளினார்.

அவ்விரு நூல்களையும் அருச்சகர் கண்டு பேராச்சரியமுற்று அடியாரெல்லாருக்குஞ் சொல்ல, அவர்கள் அந்நூல்களின் பொருளை அறிய விரும்பியவர்களாய் மாணிக்கவாசகப்பெருமானிடஞ் சென்றார்கள். அவர் எல்லோரையும் பொன்னம்பலத்திற்கு அழைத்து வந்து தம் நூல்களுக்குப் பொருள் இவரே என்று சபாநாதமூர்த்தியைச் சுட்டிக் காட்டி எல்லாருங் காணக் கனகசபையுட் புகுந்து அப்பெருமானோடு இரண்டறக் கலந்தார். அவர் இவ்வாறு முத்தியடைந்த தினம் ஆனி மகம். சுவாமிகள் முத்தியடைந்தபோது வயது ௩௨. நமது சுவாமிகளைத் திருவாதவூரடிகள், மணிவாசகர், கோவை வேந்தர், ஆளுடைய அடிகள் என்று

அழைப்பது உண்டு. சுவாமிகளை நந்தியந்தேவர் அவதாரமென்போர் குடமுழநந்தீசனை வாசகனாக்கொண்டார் என்னும் அப்பர் தேவார அடியைக் காட்டுவர்.

நாயனார் அறுபான் மும்மை நாயன்மார்களிற் சேராத தனியடியவர். இவர் சிவகரணமுற்று அறிவாற் சிவனேயாய் விளங்கியவர். இவர் உபதேசம் பெற்ற திருப்பெருந்துறையில் இவருக்கே எல்லா உற்சவாதிகளும் இப்போதும் நடத்தப்படுகின்றன. மார்கழித் திருவாதிரைக்கு முன்னே எல்லாச் சைவாலயங்களிலும் திருவெம்பாவைப்பூசை நடத்தப்படுவதும் சுவாமிகளின் தனிச் சிறப்பைக் காட்டும்.

தமிழ்வேதமாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் பன்னிருதிருமுறையில் எட்டாவது திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. இத் திருப்பாடல்களின் மொத்த எண் ௧௦௫௬. திருவாசகம் கல்நெஞ்சையும் இளகச்செய்யக்கூடியது. மனதை உருகச் செய்வதில் இதற்கு ஈடான நூல் இவ்வுலகில் வேறில்லையென்று திட்டமாய்க் கூறலாம். திருக்கோவையாரோ பேரின்பமாகிய ஞானத்தைப் புகட்டுவது.

சுவாமிகளால் தமது திருப்பாடல்களில் பாராட்டப்பட்ட அடியவராவார்:—சண்டேசுரர், கண்ணப்பர், வண்டோதரி முதலியோர். பல பழமொழிகள் திருவாசகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. அதெந்து, பப்பு முதலிய திசைச்சொற்களும் வந்துள்ளன.

சுவாமிகள் சரித்திரத்தைக் கூறும் நூல்களாவன:—திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம் முதலியன. இவருடைய திருக்கோவையாருக்குப் பேராசிரியர் எழுதிய உரையே சிறந்தது. திருக்கோவையாருண்மை என்னும் நூல் கோவையாரின் பெருமையைக் கூறும்.

துதி.

கந்தமோ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்துவாம்.

சந்தானாசாரியர்

முத்தாந்த வித்தே முளைக்குநில மாயெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே.

மெய்கண்டதேவர், அருணந்திதேவர், மறைஞானசம்பந்த தேவர், உமாபதிதேவர் ஆகிய நால்வரும் சந்தானாசாரியர் எனப் படுவர். இவர்களுள், மெய்கண்டார் அருணந்தியாருக்கும், அரு ணந்தியார் மறைஞானசம்பந்தருக்கும், மறைஞானசம்பந்தர் உமா பதியாருக்கும் குருவாயுள்ளவர்கள். இவர்கள் இப்படித் தொடர்ச் சியாய்க் குரு சிஷ்யராய் வந்தமையினாலேதான், இவர்களுக்குச் சந் தானாசாரியர்கள் என்ற பெயர் ஆயது. சந்தானம் என்பதன் பொருள் தொடர்ச்சி. இந்த நால்வரும் இவ்வுலகத்திலே சந்தானா சாரியரா யிருந்ததுபோலத் திருக்கைலாசத்திலும் நால்வர் சந்தானா சாரியரா யுள்ளவர். அவர்கள் திருநந்திதேவர், சனற்குமாரமுனி வர், சத்தியஞானதரிசிமுனிவர், பரஞ்சோதிமுனிவர் என்பவர் களாம். இவர்களுள், பரஞ்சோதிமுனிவர் மெய்கண்டாருக்குக் குருவாயுள்ளவர். ஆகவே சந்தானாசாரியர்கள் திருநந்திதேவர் முதல் உமாபதிதேவரீறாக எண்மர் உள்ளவர். திருநந்திதேவர் திருக்கைலாசத்திலுள்ளவராதலால், இந்தச் சந்தானத்துக்குத் திருக் கைலாசபரம்பரையென்று பெயர். சந்தானம் என்பதும் பரம்பரை யென்பதும் ஒரேபொருளுடையவை.

சிவபிரானால் அருளப்பட்ட வேதம் சிவாகமம் ஆகிய இரு வகை நூல்களிலுமுள்ளவைகளை மெய்கண்டார் முதலிய நால்வரும் தமிழிலே உபதேசித்தனர்; மறைஞானசம்பந்தர் ஒழிந்த மூவரும் அவைகளை உபதேசித்ததோடு நில்லாது, அவைகளை நூல்களாகவும் செய்தருளினர். இவர்கள் இத்தமிழ்நூல்களைச் செய்திராவிட் டால், எமது சமயத்தை அறிய விரும்புவோர் சமஸ்கிருதத்தை அகலமாயும் ஆழமாயும் கற்று அதன்மேல் வேத சிவாகமங்களைக் கற்கவேண்டியவராவர். இவர்கள் இத்தமிழ்நூல்களைச் செய்தருளி யது எமது பாக்கியமேயாம். இனி இவர்கள் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுவாம்.

மெய்கண்டதேவர்

பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதன்றாள் மேவுநா ளெந்நாளோ.

தென்னாட்டிலே திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத் துக்கு அருகாமையிலுள்ளது கடந்தைநகர் என வழங்கப்படும் திருப் பெண்ணாகடம் என்னும் தேவாரம்பெற்ற தலம். அத்தலத்தே அச்சுதகளப்பாளர் எனப் பெயரிய சைவ வேளாளர் ஒருவர் எழு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தார். அவருக்குக் குலகுருவா யிருந்தவர் சகலாகமபண்டிதராகிய அருணந்திசிவாசாரியர். அச் சுதருக்குப் பிள்ளை யில்லாமையால், அதைப்பற்றித் தமது குரு சுவாமிகளிடம் முறையிட்டு வருந்தினர். குருநாதர் தேவாரத்திரு முறையிற் கயிறு சாத்தினர்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னுந் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாடலிற் குறிப்பித்த படி அச்சுதரும் அவர் மனைவியாரும் திருவெண்காட்டிற்குச்சென்று முக்குளநீரில் மூழ்கிச் சிலநாட்கள் வெண்காட்டு நாதரையும் பிரம வித்தியாநாயகியையும் வழிபட்டுவந்தனர். அவ்வழிபாட்டின் பல னாக திருஞானசம்பந்தரைப்போன்ற ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை சுவேதவனப் பெருமானின் திருவருளாற் பிறந்தமை யால், அப்பெயரையே அதற்கு இட்டார்கள். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளல் என்பவர் இக்குழந்தைக்குத் தாய்மாம னார். அவர் இக்குழந்தையைத் தாய்தந்தையரோடு தமது வீட் டிற்கு அழைத்துச் சென்று அங்கேயே வளர்த்துவந்தார். அங்கே அப்படி வளர்ந்துவரும்போது, ஒருநாள் ஆகாயமார்க்கமாகத் திருக் கைலாசத்திலிருந்து பொதியமலைக்குச் சென்ற பரஞ்சோதிமாமுனி வர், இரண்டுவருடக் குழந்தையாக வீதியில் விளையாடிக்கொண் டிருந்த இச்சிறு குழந்தையின் அதிதீவிர பக்குவத்தைக் கண்டு, அவரை அணுகி சிவதீக்ஷைசெய்து மெய்கண்டதேவரென்னும் திரு

நாமத்தைச் சூட்டி சிவஞானபோதத்தை உபதேசித்தருளினர். (இச்சிவஞானபோதமே மாணிக்கவாசகருக்குச் சிவபெருமானல் திருப்பெருந்துறையிற் குருந்தமரத்தடியில் உபதேசிக்கப்பட்டதாம். மெய்கண்டார் என்பதன் பொருள் உண்மையை அறிந்தவர் என்பது.)

திருஞானசம்பந்தரைப்போல மெய்கண்டாரும் சாமுசித்தரே யாவர். சாமுசித்தராவார் முற்பிறப்பிலே செய்த புண்ணியமே லீட்டினலே ஞானவுணர்ச்சியுடன் பிறந்து சிவோபாசனைபண்ணுவோர். சமயாசாரியராகிய சம்பந்தருக்கும் சந்தானசாரியராகிய மெய்கண்டாருக்கும் இளமைப் பிராயத்திலேயே ஞானேதயம் உண்டானது நோக்கத்தக்கது.

பரஞ்சோதிமகாமுனிவர் தமக்கு உபதேசித்த சிவஞானபோதத்தை மெய்கண்டார் தமிழிலே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து வார்த்திகம் என்னும் பொழிப்புரை, உதாரணச் செய்யுள்கள், சூர்ணிக்கொத்து என்னும் அட்டவணை ஆகிய இவற்ருேடு திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறையிற் கோயில்கொண்டுள்ள பொல்லாப்பிள்ளையாரது திருவருளே துணையாகக்கொண்டு இயற்றியருளினர்.

தமது குடும்ப குருவாகிய அருணந்திசிவாசாரியரென்னும் வேதியரை வேளாளராகிய மெய்கண்டார் எப்படிச் சீடராகக் கொண்டார் என்பதை அறிவது அவசியம். மெய்கண்டார் தினந்தோறும் தமது வீட்டில் ஞானநூல்களைப் பிறருக்குப் போதித்து வந்தனர். அதனை அறிந்த அருணந்திசிவாசாரியர், மெய்கண்டாரது பக்குவநிலையை உணராது, பிரசங்க சபைக்குச் சென்று, அலட்சியமாக "ஆணவமலத்தின் சொரூபம் யாது" என்று பிரசங்கியாராகிய மெய்கண்டாரை வினவினர். அவர் "தாங்கள் நிற்கும் நிலையே ஆணவசொரூபம்" என்று கூறித் தமது பார்வையினலே அவருக்குச் சிவதீக்ஷை செய்தார். உடனே அருணந்தியார் மெய்கண்டாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவரை ஞானகுருவாகக் கொண்டார்; சிவஞானபோதத்தை அவரால் உபதேசிக்கப்பெற்றார்; மெய்கண்டாருடைய நாற்பத்தொன்பது மாணவர்களுள் தலைசிறந்து விளங்கினர்.

மெய்கண்டாரின் மற்றைய மாணவர்களுட் சிறந்தவர் உண்மைவிளக்கஞ்செய்த மனவாசகம் கடந்தாரும், இருபா இருபஃது முதலிய சாத்திர நூல்களியற்றிய சீகாழிச் சிற்றம்பலநாடிகள் முதலியோருமாவர்.

சிவஞானபோதத்திற்குப் பல உரைகள் உண்டு. அதிகமாக வழங்கப்படுவன சிவஞானசுவாமிகள் எழுதிய சிற்றுரையும் மாபாடியமும் பாண்டிப்பெருமாள்பிள்ளை இயற்றிய விருத்தியுரையுமாம். மெய்கண்டார் சிவபதமடைந்த இடம் திருவெண்ணெய்நல்லூர். குருபூசைத்தினம் ஐப்பசிச் சுவாதி.

"சிந்திப்பாம் வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவனடி
வந்திப்பாம் வாழ்த்தி மகிழ்வாம்."

அருணந்தி சிவாசாரியர்

"பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ"

மெய்கண்டாருடைய முதல் மாணவராகிய ஆசாரியசுவாமிகள் திருவதிகைக்குச் சமீபத்திலுள்ள திருத்துறையூரிலே ஆதி சைவ குலத்திலே பிறந்தவர். வேதசிவாகமங்களை ஐயந்திரிபறக்கற்று விளங்கியவர். இத்தகைய கல்விச் சிறப்பினலேயே இவருக்குச் சகலாகம பண்டிதர் என்னுங் காரணப்பெயர் வழங்குவதாயிற்று. இவர் தமது ஆசிரியர் செய்தருளிய சிவஞானபோதத்தின் வழிநூலாக, ௩௨௯ பாடல்களையுடைய சிவஞான சித்தியாரையும் இருபா இருபஃது என்னுஞ் சிறு நூலையும் இயற்றியவர். சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என்னும் இரண்டு பாகங்களைக் கொண்டது. பரபக்கம் மற்றைய சமயங்களின் கொள்கைகளைக் கூறி அவற்றிலுள்ள பிழைகளைக் கூறுவது. சுபக்கம் சைவக்

கொள்கைகளைக் கூறுவது. இச் சிவஞானசித்தியாருக்குச் சமானமான வேறு நூல் இல்லையென்று கூறுப. "சிவத்திற்குமேற் றெய்வமில்லை, சிவஞானசித்திக்குமேற் சாத்திரமில்லை" என்னும் பழமொழியை நோக்குக. தாயுமான சுவாமிகளுக்குத் தமது மௌன குரு தேசிகரால் உபதேசிக்கப்பட்டது சிவஞானசித்தியா ரென்ப. சிவஞானசித்தியாருக்கு ஓர் அகலவுரை வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளால் இயற்றப்பட் டிருப்பதாகவும் அதற்கு ஞானாபரண விருத்தியுரை எனப் பெயரென்றுங் கூறுப. அவ்விருத்தியுரை சிவஞான சுவாமிகள் இயற்றிய சிவஞானமா பாடியத்தை ஒத்ததென்றுங் கூறுப. இவ்வரிய உரைப்பிரதி தருமபுர ஆதீனத்திலிருப்பதாகவும் அவ்வாதீனத்தார் அச்சிட்டு வெளியிட முயற்சி செய்து வருவதாகவும் தெரிகின்றன. முன்னரே இந் நூலுக்கு ஆறு பெரியோர்களால் இயற்றப்பட்ட உரைகள் உண்டு. இத்தனை உரைகள் இந்நூலுக்கிருப்பது இதன் சிறப்பைக் காட்டுகின்றது.

சிவாசாரியர் திருத்துறை யூரிலேயே சிவபதமடைந்தனரெனக் கூறுவர். இவர் குருபூசைத்தினம் புரட்டாசிப் பூரம்.

மறைஞான சம்பந்தர்

"சிற்றம்பலமன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கோற்றங்குடி முதலைக்கூறுநா ளெந்நாளோ."

அருணந்தி சிவாசாரியாரின் மாணவராகிய இச்சம்பந்தர் திருப்பெண்ணாகடத்திலே வேதியர் குலத்திலே பிறந்தவர். வேதசிவாகமங்களை நன்றாய்க் கற்றுத் தெளிவுபெற்றவர். இதனால் இவருக்கு மறைஞான சம்பந்தர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. தமது குருநாதராகிய அருணந்தியாரிடம் பெற்ற உபதேசங்களைத் தமது மாணவருட் சிறந்த உமாபதி சிவாசாரியருக்கு உபதேசித்தருளிச் சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியிலே சில ஆண்டுகள் மௌனவிரதம் பூண்டிருந்து பிறகு சிவசாயுச்சியம் அடைந்தவர்.

இவர் மௌனநிலையிலேயே நின்றமையால் யாதொரு நூலுஞ் செய்ததாகத் தெரியவில்லை. இவருடைய சமாதி திருக்களாஞ்சேரியிலுள்ளது. இவரது குருபூசைத்தினம் ஆவணிஉத்தரம்.

உமாபதி சிவாசாரியர்

"துறைவிலநுண் ஞானமுதல் கோற்றங்குடியார்தம்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ"

மறைஞான சம்பந்தருடைய மாணவராகிய உமாபதி சிவம் தில்லைவாழந்தணர் மூவாயிரவரில் ஒருவர். சந்தானகுரவர் நால்வருள் கடையவர். இவர் சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன்குடி என்னுங் கிராமத்தில் வசித்து வந்தமையால் கொற்றங்குடி முதலியாரென்று அழைக்கப்பட்டார். இப்பெரியார் வேதசிவாகமங்களைக் கசடறக் கற்று அவற்றின்படி நின்றவர். வடமொழியிலும் தமிழிலும் பெரும்புலமை யுடையவர். சிவ பத்தியிலும் அடியார் பத்தியிலும் சிறந்தவர்.

ஒருநாள் இச்சிவனார் நடராசப் பெருமானைப் பூசித்துத் திரும்பும்போது அக்காலத்தில் இவருக்கு எற்பட்டிருந்த சிவிகை, தீவர்த்தி, கொடி, பரிவாரம் முதலிய விருதுகளோடு வீதிவழியே சென்றார். இவரது ஆடம்பரத்தைக்கண்ட மறைஞான சம்பந்தர் "பட்ட கட்டையிற் பகற்குருடன் போகின்றான் பாருங்கள்" என்று குறிப்பாகக் கூறினார். இதனைக்கேட்ட நாயனார் சிவிகையினின்றும் உடனே இறங்கி மறைஞான சம்பந்தரை வணங்கி, அவர்வழியே நடப்பாராயினர். சம்பந்தர் சிவனாது மேலான நிலையை உலகினருக்கு அறிவிக்கும் பொருட்டுத் தாம் புடைவை நெய்பவர் வீதிக்கு ஒருநாட்சென்று அங்குள்ளவரிடம் நெசவுக்கு வைத்திருக்கும் கூழை வாங்கிப் பருகினார். அப்படிப் பருகுங்கால் அவரது முழங்கை வழியாக ஒழுகிய சேடத்தை அருகேயிருந்த உமாபதியார் எற்றுப் போனந்தத்துடன் மாந்தினார். இச் செயற்கருஞ் செய்கையை

அறிந்த மற்றைய தில்லைவாழந்தணர்கள் சிவாசாரியாது உந்தது நிலையை அறியாது அவரைப் பழித்தன ரென்றும், நடேசப்பெருமானைப் பூசிக்க ஒட்டாதபடி அவரைத் தடுத்தனரென்றும் கூறுப.

சிவாசாரிய சுவாமிகளிடம் திருவருட் சிறப்புற்று விளங்கிய தென்பதற்கு பின்வரும் மகிமைகள் சான்று கூறும்:—

(க) பெற்ருன் சாம்பான் என்னும் பஞ்சமகுல சிவ பக்தனுக்குச் சபாநாயகராது,

> "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
> குடியார்க்கெழுதிய கைச்சீட்டுப்—படியின்மிசைப்
> பெற்றன் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
> முத்தி கொடுக்கமுறை,

என்னுந் திருமுகப் பாசுரத்தின்படி முத்திகொடுத் தருளினமையும் பின்பு அச் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலியவர்களும் காணப் பரிபக்குவ மடைந்திருந்த முள்ளிச்செடி ஒன்றினுக்கு முத்தி கொடுத்தருளியது.

(உ) சிதம்பரத்தில் நிகழும் மார்கழித் திருவாதிரைத் திருவிழா ஒன்றிலே கொடியேருது தடைப்பட்டு நின்றபோது "கொடிக்கவி" என்னும் சிறுநூலைப் பாடி ஏறச் செய்தருளியது.

(ங) சிதம்பர மான்மியங்கள் பல. அவற்றுள் கோயிற்புராணம் ஒன்று. இதுசிவனர் பாடியது. இப்புராணம் அரங்கேற்றப்படாமல் பேடகத்துள் வைக்கப்பட்டிருந்தபொழுது, தாம் உமாபதி சிவத்தின் பேடகத்துள் மறைந்து இருப்பதாகச் சபாநாயகர் தில்லைவாழந்தணர்களுக்கு அறிவித்தமையும் அவர்கள் ஆசாரிய சுவாமிகளைத் தேடி வந்து கோயிற் புராணத்தை அரங்கேற்றச் செய்தமையுமாம்.

சிவனர் இயற்றிய நூல்களாவன:—

சித்தாந்த அட்டகம் (சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினு வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்) கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், சேக்கிழார் புராணம், திருமுறை கண்ட புராணம், திருப்பதிக்கோவை, சிவநாமக்கலி வெண்பா, பௌட்காரகம வடமொழி வியாக்கியானம் முதலியன. இவற்றுள் சிவப்பிரகாசமாவது. எளிய செய்யுள் நடையில் முதல் நூலாகிய சிவஞானபோதம் அதன் வழிநூலாகிய சிவஞான சித்தியார் ஆகிய இவ்விருநூல்களுட் கூறப்பட்ட விஷயங்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது. பாசப்பற்று நீங்க ஞானம்பெற்றுத் திருவடியை அடையும் முறையைத் தெளிவாய்க் காட்டுவது. இவ்வரிய சார்பு நூலுக்குத் திருவிளங்கத் தேசிகர் எழுதிய புத்துரையே இக் காலத்திற்கு ஏற்றது.

திருவருட்பயன் நூறு திருக்குறட் பாக்களால் சித்தாந்தக் கருத்துகளைச் சுருங்கக் கூறுவது. இதற்குப் பல பழைய உரைகளிருப்பினும் புலோலி ஸ்ரீமத். சு. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் எழுதிய விளக்கவுரையே தற்கால உலக நிலைமைக்கு இயைந்ததென்று கூறலாம். ஏனைய சிறு நூல்களும் சித்தாந்த சாத்திரக் கருத்துகளை விளக்குவனவாம்.

சுவாமிகள் அடியார் பக்தியிற் சிறந்தவரென்பது அவர்கள் பாடிய திருத்தொண்டர் புராணசாரம் சேக்கிழார் புராணம் முதலியவற்ருல் அறியலாம். சேக்கிழாரிடத்துப் பேரன்புடையவ ரென்பது பின்வரும் சேக்கிழார் புராணத் திருவிருத்தத்தாற் புலப்படுகின்றது.

> மதுரவிராமாயண கதையுரைசெய்த வான்மிகபகவனு மொப்பல்ல
> விதிவழி பாரதமுறைசெய்து கரைசெய்த வேதவியாதனுமொப்பல்ல
> சிதைவறவாயிர நாவுடனறிவுள சேடவிசேடனு மொப்பல்ல
> பொதியமலைக்குறு முனிவனு மொப்பல புகழ்புனைகுன்றை முனிக்
> கென்பார்.

கோயிற் புராணம் சிதம்பரத்தின் பெருமையைக் கூறுவது இதன்கண் சைவசித்தாந்த நுண் பொருள்கள் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன. ஏனைய நூல்களும் இத்தன்மையனவே.

சுவாமிகள் விளங்கியகாலம் இப்போதைக்கு ௬௫௦ ஆண்டுகளுக்கு முன்னரென்பது அவர்கள் இயற்றிய சங்கற்ப நிராகரணத்தால் தெரிகின்றது.

சுவாமிகளின் பரம்பரையில் வந்தமாணவரே திருவாவடுதுறை ஆதீனத் தாபகராகிய நமச்சிவாய தேசிகரும் தருமபுர ஆதீனத்தாபகராகிய ஞானசம்பந்த தேசிகருமாம். சுவாமிகளின் திருக்கோயில் கொற்றவன் குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இவர் சிவபதமடைந்த தினம் சித்திரை அத்தமாகும்.

மெய்கண்ட சாத்திரமெனப்படும் சித்தாந்த சைவஞான சாத்திரங்கள் திருவுந்தி முதற் சங்கற்ப நிராகரணம் இறுதியாக வரும் பதினன்குமாம். அவற்றின் பெயரும் முறையும் பின்வரும் வெண்பாவால் அறியலாம்.

உந்திகளிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றி கொடிபாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

நூல்	ஆசிரியர்
௧. திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்
௨. திருக்களிற்றுப்படியார்	திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்.
௩. சிவஞானபோதம்	மெய்கண்டதேவநாயனார்.
௪. சிவஞானசித்தியார்	அருணந்தி சிவாசாரியர்.
௫. இருபா இருபஃது	
௬. உண்மை விளக்கம்	மனவாசகங் கடந்தார்.
௭. சிவப்பிரகாசம்	உமாபதி சிவம்.
௮. திருவருட்பயன்	
௯. வினாவெண்பா	
௰. போற்றிப் பஃறொடை	
௧௧. கொடிக் கவி	
௧௨. நெஞ்சுவிடுதூது	
௧௩. உண்மைநெறி விளக்கம்	
௧௪. சங்கற்ப நிராகரணம்	

மேற்கூறிய தமிழ்ச்சித்தாந்த சாத்திர நூல்களுக்குச் சார்பாகப் பின்வந்தவர்களால் பல நூல்கள் ஆக்கப்பட்டன. அவை தருமபுரம் திருவாவடுதுறை ஆதீனங்களிலிருந்த சிவானுபவச் செல்வர்களால் அவ்வப்போது இயற்றப்பட்டவை. அவை பண்டார சாத்திரமென வழங்கப்படும். சிற்றம்பல நாடிகள் சாத்திரக்கொத்து, முத்திநிச்சயம் சிவநெறிப் பிரகாசம், தத்துவப் பிரகாசம், சிவபோக சாரம் முதலியன இவ் வரிசையிற் சேர்ந்தனவாம்.

திருவுந்தியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபஃது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மை விளக்கம், உண்மைநெறி விளக்கம், கொடிக்கவி, வினாவெண்பா முதலிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இம்மொழி பெயர்ப்பின் மூலமாகவே ஏனையோருக்குச் சைவசித்தாந்தக் கொள்கை இன்னதென்று தெரியலாயிற்று. இவ்வாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பெரும்புகழ் படைத்தவர் எனது நண்பரும் போறிஞருமாகிய நல்லசாமிப் பிள்ளையவர்களாம். அவர்கள் சைவ சமயத்திற்காகப் புரிந்ததொண்டு மிகவும் போற்றத் தக்கதாம்.

சித்தந் தெளிந்து சிவமானோ ரெல்லார்க்குங்
கோத்தடிமை யான குடிநான் பராபரமே.

திருச்சிற்றம்பலம்.